சித்திரபானு ௵
பங்குனி ௴

விலை அணா 4

MARCH
1943



ராவ்பகதூர் கே. வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர்.

நவிக்கையாள் சொல்லுகிறார் . . .

"அழுக்கடைந்த ஆடைகளிலிருந்து அழுக்கைத் தானாகவே போக்கி விடுவதால் சுயமாக வெளுக்கும் சக்தி வாய்ந்ததென்று இதை சோப் செய்யும் ரசாயன சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். அதில் வெளுக்கும் 'சக்தி' அதிகமாக உள்ளதென்றும் சொல்லுகிறார்கள. ஸன்லைட் சோப்பின் நுரையை ஆடைகளுக்கு இட்டால் அது வெளுக்கும் வேலையை நமக்கு சிரமம் கொடுக்காமல் செய்து விடுகிறது. என்னுடைய சம்சாரமும், தாயாரும் எனக்கு இதை அநேக தடவை சொல்லி இருக்கிறார்கள்."

ஸன்லைட் சோப்

சுயமாக வெளுக்கும் நுரை உடையது

இப்பொழுது மெழுகுத் தாளினால் சுற்றப்பட்டு விற்கப்படுகிறது

S. 63-33 TM

ஒரு லீவர் பிரதர்ஸ் தயாரிப்பு

பாரதமணி

ஆசிரியர்:
கா. சி. வேங்கடரமணி

காரியாலயம்:
43, மஹாதானத்தெரு, மாயவரம்.

மாத வெளியீடு

அன்னைதன் செயலே அனைத்து மென்றெண்ணிச்
சென்னிமேற் கரங்கூப்பிப் பணிவாம் — "தீரன்"

மாலை 9	MARCH 1943 :: சித்திரபானு௵ பங்குனி௴	முத்து 3

பொருளடக்கம்

			பக்கம்
1	புத்துயிர்	சக்திதாஸன் விசுவனாதன்	66
2	ராவ்பகதூர் கே. வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர்	கா. சி. வேங்கடரமணி	67
3	உத்தர ராமசரிதம்	கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி	70
4	பண்டைகாலக் கடற்படை	தி. நா. சுப்பிரமணியன்	73
5	தொன்மைத் தொண்டர்	மு. அருணாசலம், எம். ஏ.	76
6	வாஸ்தவம் எது?	சந்திரசேகரன், எம்.ஏ., பி.எல்.	82
7	மதிப்புரை		92

"பாரதமணி"யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் வெளிவரும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

புத்துயிர்

(முதடி எடுப்பில் பல்லவி அமைப்பு)

ராகமாலிகை — "நாதசங்கீத" மெட்டு

[செஞ்சுருட்டி]

பாரத பூமியின் பாக்கியமே நாட்டில்
நேரும் இடரெல்லாம் தீருவதும் இந்த (பா)

(1) கலியுகந்தனிலே கண் கண்டதெய்வமாம் காந்தி
நலிவுற்ற இந்தியாவை காக்குந்தெய்வமாம் சாந்தி
நிலவும் குணமும் சொல்லும் நேர்மையுடனே இந்த
நிலந்தனிலே வந்து பிறந்தனரே

(புன்னாக வராளி)

(2) புண்ணிய பூமியில் தோன்றிய நாள் முதல்
நுண்ணறிவால் தேச நிலையுணர்ந்தே பல
கண்ணியம் நிறைந்த பதவிகளைத் துறந்தே
நண்ணினர் நம் தாய் நாட்டின் சேவை தனையே

(சோஹினி)

(3) பன்முறை சிறைவாசம் உண்ணா விரதமும்
புன்முறுவலுடனே புரிந்தார் அஹிம்சையால்
கன்மன முடையோரும் கலங்குந் தன்மையிந்த
உண்ணா விரதத்திற்கும் உண்டெனவுணர்ந்த

(நாத நாமக்ரிய)

(4) சத்வகுண நாதன் சத்திய போதன்
புத்தியற்றோர் செயலைப் பொறுப்பதற்காக
சித்தமுடன் சிறையில் சாதுவாம் பசுவை
ஒத்திருக்கும் அந்த வேளையிலே சில

(குந்தல வராளி)

(5) வினாரின் செய்கையை வேம்பென மதித்தே
ஞானியாம் காந்தி நாடினர் விரதத்தை
தீன சகாயனின் தேகநிலை மிக
க்ஷீணமானதால் மனம் மாழ்கினர் யாவரும்

(சிந்து பைரவி)

(6) தேவியினருளால் தவசியின் தூய
ஆவிக்கோர் புதுஜீவன் கிடைத்ததால் நாடும்
மேவும் புத்துயிரென பூவுளோர் தேவியை
சேவித்தும் மங்கல மணி யோசை யெங்கும். (பா)

—சக்திதாஸன் விசுவநாதன், கீரனூர்.

ராவ்பகதூர் கே. வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர்

கா. சி. வேங்கடரமணி

ராவ்பகதூர் பட்டம் எனக்குப் பிடிக்கவில்லை. ஸ்ரீமான் கே. வி. கிருஷ்ண ஸ்வாமி அய்யருக்கும் அது பொருத்த மில்லை. உண்மைத் தொண்டனுக்குப் பாபரப்பு ஊட்டப் பட்டமே தேவை யில்லை. அப்படிப்பட்ட சேவையைக் கௌரவப்படுத்த வேண்டுமென்றால் குறைந்தபட்சம் 'ஸர்' பட்டமாவது அளிக்கவேண்டும். ராவ்பகதூர் போன்ற சில்லரைப் பட்டங்களைத் தங்கள் மேலதி காரிகளும் மேற்பட்டவர்களும் மனம் கோணுமல் 'எஸ்சேவை' செய்யும் சக்தி வாய்ந்தவர்களுக்கே ஒதுக்கிவைக்கலாம்.

ஸ்ரீமான் கே. வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர் 6—4—1885-ம் வருஷத்தில் கும்பகோணத்தில் பிறந்து வளர்ந்தவர். எப். ஏ. பரீட்சையைக் கும்பகோணம் காலேஜில் படித்துப் பாஸ் செய்துவிட்டு பி. ஏ. க்குச் சென்னைப் பிரஸிடென்ஸி காலேஜில் வந்துசேர்ந்து உயர்தரமாகப் பாஸ் செய்தார். 1905-ல் பி. எல். பாஸ்செய்து எஸ். ஸ்ரீனிவாஸய்யங்கா ரிடம் அப்ரண்டிஸ்ஸாக இருந்து 25—4—1907-ல் வக்கீலாகச் சேர்ந்தார். பிறந்து பதினெட்டு வருஷம் வரையில் காவேரி தீரத்தின் கடாட்சமும் புண்ய மும் ஸ்ரீமான் கிருஷ்ணஸ்வாமி அய்ய ருக்குக் கிடைத்தது. பிறகு குழாய்த் தண்ணியும், வெந்நீரும், வக்கீல் கோஷ்டியும்.

2

இளமைப் பிராயத்திலே வக்கீல் தொழிலில் பேரும் கீர்த்தியும் செல்வ மும் அடைந்தவர். சுபாவத்திலே பிற ருக்குத் தலைவணங்கத் தெரியாது. தொழிலோ வக்கீல். இளம்பிராயத்திலே அதில் தேட்டையான ஜீவனம். ஜெமீன் தார் கட்சிக்காரர்கள், இரண்டு பக்கத் திலும் நாட்டுக்கோட்டைச் செட்டி மார்கள், எஸ். ஸ்ரீனிவாஸ அய்யங்காரு டைய பூரண அன்பும் ஆதரவும்.

புத்திசாலியான வக்கீல்களுக்கு ஆதி யிலவர்கள் எவ்வளவு ஏழையாக இருந் தாலும் கொஞ்சம் பணம் வரத்துவக்கிய பின் நூறு ரூபாய் நோட்டிலுள்ள ஆகர்ஷணசக்தி குறைந்துகொண்டே வரும். பணத்தைக்கொண்டே திருப்தி யடைவதில்லை. முறமுறப்பான நோட்டு கள்கூடத் திகட்டிப் போய்விடும். ஸ்ரீமான் கே. வி. கிருஷ்ணஸ்வாமி அய்ய ருக்கும் அப்படியே.

பணம்திகட்டப் பதவிமோஹம். இது வும் அரசியலில் மிகப்பொருந்தும். பதவி யையே எதிர்பாராமல் தன் பணத்தைக் கொண்டு மாத்திரம் சேவைசெய்ய வேண்டுமென்று பூர்ண நம்பிக்கையும் எண்ணமும் கொண்டவர்கள் உலகில் சிலரே.

1923-வது வருஷத்தில் ஸ்ரீமான் கே. வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர் முதன் முதல் தானே எதிர்பாராதபடி சமூகத் திற்குச் சேவை செய்ய ஆரம்பித்தார். சென்னைச் சர்வகலாசாலையில் செனட் சிண்டிகேட் மெம்பராகத் தேர்ந்தெடுக் கப்பட்டார். அதுமுதல் இன்றுவரையில் சென்னைச் சர்வகலாசாலைக்கு மாசற்ற தொண்டு புரிந்து வருகிறார்.

1929-ம் வருஷத்தில் சென்னை சர்வ கலசசாலையின் மேன்பார்வையில் நடந்து வந்த தமிழ் அகராதிப் பொறுப்பை ஒப்புக்கொண்டார். அந்தச் சமயத்தில் அந்தத் தமிழ் அகராதி ஜீவனை இழந்த ஓர் வெள்ளை யானையாக இருந்தது— ஜீவனை யிழந்தும் தீனி தின்னும் வெள்ளை யானையாக இருந்தது. இவர் பொறுப்பில் வந்தவுடன் தீனியைக் குறைத்துக்

கண்டகோடரி போட்டு உயிர்மூட்டி எழுப்பி வேலைசெய்யும்படியாகச் செய்வித்தார். இதை ஒரு மந்திரவாதிக்கு மேற்பட்ட ஒரு அபாரவேலையாகக் கருத வேண்டும்.

என் மதிப்பில் இவர்செய்த வேலைகளுக்கெல்லாம் உத்தமமான வேலை புத்தகசாலை இயக்கத்தை உண்டுபண்ணினதுதான். இந்த உத்தம கைங்கரியத்தை 1927-ல் எதேச்சையாய் ஆரம்பித்தார். ரன்தாவில் பொறுக்கிய ஏதோ ஒரு விதையை ஆற்றங்கரையில் ஊன்றி ஒரு பெரிய வட விருட்சமாகச் செய்துவிட்டார். இதனுல் இவர்பேர் அழியாமல் நிற்கும்.

இவர் சங்கீதத்திற்கும் உழைத்துப் பாடுபட்டுச் சங்கீத உலகிற்கே ஒரு கிளர்ச்சியும் புத்துயிரும் அளித்திருப்பது எல்லோருக்கும் தெரிந்தவிஷயம்.

1936-வது வருஷத்தில் மைலாப்பூரிலிருக்கும் பி. எஸ். ஹைஸ்கூலின் காரியதரிசிப் பதவியையும் ஒப்புக்கொண்டு சிறப்பாய் நடத்திவருகிருர். இது ஒரு கெடான வேலை. சர்வகலாசாலை உப அத்தியக்ஷர் வேலையைவிடச் சிரமமான வேலை. தைரியமும் சாமர்த்தியமும் இனமும் வேண்டும்.

3

நமது அடிமை நாட்டில் சாதாரணமாய் நாம் காணக்கூடாத பல அருமையான குணங்களை உடையவர், ஸ்ரீமான் கே.வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர். எதையும் செயலாக்கும் திறமைவாய்ந்தவர். சளைக்காத உழைப்பு. ஓய்வற்ற சுறுசுறுப்பு. தைரியம். உண்மையை நம்பிப் பேசுகிறவர்.

எந்தக்காரியத்திலும் 'செய்வன திருந்தச்செய்' என்ற கொள்கையைச் சுவானுபவத்தில் கொண்டுவந்தவர். அப்படிச் செய்வதில் யோகசாதனத்துக்குச் சமானமான ஓர் இன்பத்தை அடைகிறவர். சில்லரைக்காரியங்களைக்கூட தானே செய்வதில் ஊக்கமுடையவர். பிறர் உதவியைத்தேடாமல், பத்து வேலைக்காரர்களிருந்தாலும், எதையும் தானுகவே செய்பவர். அப்படியிருந்தும் பிறரிடம் அதட்டி உருட்டி வேலைவாங்குவதிலும் மிக்க சமர்த்தர். மின்னற்கொடிபோல் தாவும் மூளை. தொட்ட காரியத்தை எப்படியாவது நிறைவேற்ற வேண்டுமென்ற விடாமுயற்சி. பயம், நயம்—பயம்கூட, நயம் குறைவு—இரண்டையும் தைரியத்துடன் பிரயோகித்துப் பொதுக்காரியங்களைத் திறமையுடன், ஒழுக்கத்துடன் நடத்தும் இயல்புடையவர். ஒன்றிலும் ஈடுபடாத 'ஸகண்டப்பில்' பேசும் வக்கீல்களைக்கூடப் பொதுத்தொண்டில் இழுத்துப்போடும் திறமை வாய்ந்தவர். சூது வாது கிடையாது. நேரிட்டவழி.

இவ்வளவு குணங்கள் வாய்த்திருந்தும் ஒரு பெரும் பதவியை இவர் இதுவரையில் பெருததற்குக் காரணங்கள் பல. அதில் ஒரு முக்கிய காரணம் இவர் அரசியல் துறையில் இறங்காததுதான். அப்படி இவர் இறங்கியிருந்தால் தேசத்திற்கு இன்னும் பெரிய தொண்டு அரசியல்துறையிலேயே செய்திருப்பார். இவர் குணங்களில் இவருக்கு விரோதமான குணங்கள் சிலவும் அரசியல் துறையில் கஷ்டசேவையால் சீர்திருத்தமாகியிருக்கும். இன்னமும் காலதாமதமாகவில்லை. இவர் போலொத்த குணங்களும் சக்தியும் வாய்ந்தோர் அரசியலில் சிலரே. அரசியலில் வரவேற்பு ஏது? நாமாகவே முட்டிக்கொண்டு—சுவாமி தெரிசனத்திற்குக் கூட்டத்தில் நெருக்கி வழி உண்டுபண்ணிக்கொண்டு போவது போல்—போகவேண்டியதுதான்.

இவர் இதுவரையில் கற்காத பலவிஷயங்களை அரசியல் துறையில் கற்றுக் கொள்வார்; நிச்சயம். இரண்டு வருஷம் தேசியத் தொண்டு அரசியலில் செய்த பிறகு இவருக்கு மந்திரிஸ்தானம் கிடைத்தால் எனக்கு ஆச்சரியமிராது. நாட்டிற்கு க்ஷேமமுண்டு.

4

ஸ்ரீமான் கே. வி. கிருஷ்ணஸ்வாமி அய்யரின் தன்மை ஓர் உயர்தரப் பெண்

மணியின் மனப்பான்மையைப் போலொத்தது. நட்பைக் காதலுக்குச் சமமாக உணர்பவர். பிறரைச் சார்ந்து நிற்கும் தன்மை. தட்டிக்கொடுத்து, அதுவும் நிமிஷத்திற்கு நிமிஷம், வேலை வாங்க வேண்டும். யாராவது ஒரு பெரியார் இவருக்கு இதுவரையில் பூரணமாகக் கைக்கொடுத்திருந்தால் பல காரியங்களில் வெற்றியடைந்திருப்பார். ஸர் சுப்ரமணிய அய்யரைப்போல் ஒரு பெரியார் தேவை. அப்படியிருந்தால் ஸ்ரீமான் கே. வி. கிருஷ்ணஸ்வாமி அய்யரிடமிருந்து நூற்றுக்கு நூறு எடுக்கலாம்.

சார்ந்தோரைக் காப்பாற்றுவார்; கைவிடமாட்டார். எதிர்ப்போராடுபவர்க்கு இவர் பண்ணையில் இடமில்லை ஒருவருக்கும் தலைகுனிந்து போகார்.

ஸ்ரீமான் கிருஷ்ணசாமி அய்யருக்கு இன்றைக்குச் செய்யக்கூடியதை நாளைக்கு ஒத்திப்போடும் சுபாவமில்லை. காவேரி தீரத்தில் பிறந்து வளர்ந்தும் சோம்பலில்லை.

பால்யமான தோற்றம், கையில் சுறுசுறுப்பு, எதிர்பாராத நிர்வாகசக்தி. ஆனால் பெரிய விஷயங்களில் ஒன்று சேர்த்துப்பார்க்கும் தீர்க்க திருஷ்டிக் குறைவு. வேற்றுமையில் ஒற்றுமையைப் பார்க்கும் கண்பார்வை மட்டு. பிறருக்கு உட்படிந்து பணிசெய்யும் சுபாவம் இல்லை. மூக்குக்கயிறில்லாத மேற்கத்தி பாடு. இவரையடக்கிக் கையாண்டு வேலைவாங்கும் தலைவருமில்லை, தக்க கலப்பையுமில்லை.

ஸ்ரீமான் கே. வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர் எனக்குப் பலநாள் நண்பர். இருபத்திஐந்து வருஷங்களாக அவரை நன்கு அறிவேன். மிக்க நெருங்கியும் சிலகாலம் பழகியிருக்கிறேன். இவர் ஆற்றுவெள்ளமல்ல — ஓடும்பொழுதே வாரியிறைத்து அள்ளிக்கொடுத்துக் கொப்புளித்துக்கொண்டேபோக. கிணற்று வெள்ளம். ஆழத்தில் ஜலம். ஆனால் சுத்த ஜலம். அதை அநுபவிக்கத் தாம்புக்கயிறு, தோண்டி, ஜகடை முதலிய சாதனங்கள் வேண்டும். பொறுமையும் அடக்கமும் முயற்சியும் வேண்டும். ஆனால் இவரை அரசியலில் இறக்கினால் கிணற்றுக்கு 'எலக்ட்ரிக்பம்பு', வைப்பதுபோல் ஆகும்.

வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர், ஸர் பி. எஸ். சிவஸ்வாமி அய்யர் இவர்களுக்குப் பிறகு பொதுஸ்தாபனங்களுக்காக ஸ்ரீமான் கே.வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர் தான் மிகப் பாடுபட்டிருக்கிறார். ஆனால் அதில் ஒரே ஒரு குறைதான் உண்டு. தான் சேமித்து வைத்திருக்கும் சொந்தத் திரவியத்தில் ஒரு லட்ச ரூபாயைப் பிரித்தெடுத்துத் தன் மனதுபோல் ஒரு தர்மஸ்தாபனத்தை இவர் கூடிய சீக்கிரத்தில் செய்யவேண்டியதுதான்.

இவர் இதுவரையில் செய்திருக்கும் நிர்மாணசேவைக்கு நம்முடைய நன்றியைச் செலுத்துகிறோம். தமிழ் அகராதியே கோவில் கட்டிய புண்ணியமாகும். புத்தகசாலை இயக்கம் குளம் வெட்டிய புண்ணியமாகும். சோழநாட்டில் இதற்கும் மேலான தர்மம் உண்டோ!

உத்தர ராம சரிதம்

திவான்பகதூர் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி

நான் 'உத்தரராம' சரிதத்தைப்பற்றி சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் "கலைமகளில்" எழுதிய கட்டுரையைப் படித்தேன். அது விமர்சன முறையில் அழகாகக் கோர்வையாக சாதுரியமாக மனதில் நிர்மாணம் செய்து அவருடைய வழக்கமான சுருக்கமான விளக்கமான நடையில் எழுதப்பட்டிருக்கின்றது. நான் ராமனையும் சீதையையும் பற்றியுள்ள காவ்யநாடக கத்ய விமர்சனங்கள் முதலியவைகளை என் ஆயுள்முழுவதும் படித்து வந்திருக்கிறேன். ஒரு சமயம் 'சீதாவிவாஸனம்' என்று ஒரு காவ்யமோ நாடகமோ எழுதவேணுமென்று நினைத்து முயற்சியும் செய்தேன். எனக்கும் சீதையை ராமன் காட்டுக்கனுப்பியதைப்பற்றிக் கடுஞ்சினம் எழுந்தது. ஆனால் ராமாயணத்தைத் திரும்பித் திரும்பிப் படிக்கப் படிக்க என் சினம் மாறிப்போயிற்று. இப்பொழுது மூப்பினாலோ, மடமையாலோ, உடல்தளர்ச்சியாலோ, மனத்தின் தாழ்வாலோ இல்லாவிட்டால் ஆத்ம பக்குவத்தாலோ தோன்றுகின்ற சிற்சில எண்ணங்களை மட்டும் இங்கே குறிப்பிடுகின்றேன். என்னை மன்னித்து என் சொற்களுக்கு செவிசாற்றுமாறு நான் அறிஞர்களைத் தாழ்வாகக் கோருகின்றேன்.

ராமன் செய்த செய்கையைப்பற்றி ஜடாயுவும் அனுமானும் லக்ஷ்மணனும் பரதனும் சினந்து ராமனை வெறுத்திருப்பார்கள் என்று ராஜகோபாலாச்சாரியார் கூறுகின்றார். ஜடாயு இறந்துபோய் விட்டார். அனுமான் சீதையைக் காட்டுக்கனுப்புமிடத்தில் இருக்கவேயில்லை. அவர்கள் எப்படி இருந்திருக்கக்கூடும்? என்று நம்மால் நினைக்கமுடியாத விஷயம். ராமனுடைய உள்ளுணர்ச்சியை அறிந்தவர்களானதால் அவர்களுக்குச் சினம் வந்திருக்காது. வந்தாலும் ஒரு நிமிஷத்திற்குள் சாந்தமாய்ப் போயிருக்கும் என்று நான் நினைக்கிறேன். சீதையின் அக்கினிப்பிரவேசத்தின்பொழுது துடிக்காத அனுமான் சீதையைக் காட்டுக்கனுப்பியபொழுது துடித்திருப்பாரு என்று என்னுள்ளத்தில் ஐயம் எழுகின்றது. ஆனல் லக்ஷ்மணன் பரதன் சத்ருக்னன் கூடயிருந்தார்கள். அவர்கள் செய்ததை மட்டும் இவ்விடத்தில் கூறுகின்றேன். ராஜகோபாலாச்சாரியார் "உத்தரகாண்டம் யாரோ எழுதி ராமாயணத்துடன் சேர்ந்தேபோயிற்று" என்று கூறுகின்ருர். இது ஒரு பழமையான பிரச்னை இதைப்பற்றி என்னுடைய "வால்மீகியின் அறிவும் கலையும்" (Valmiki: His Mind and Art) என்ற நூலில் உத்தரகாண்டம் வால்மீகியினுல் இயற்றப்பட்டது என்று உறுதிப்படுத்தியிருக்கின்றேன்.

-ராமர் லக்ஷ்மணரிடம் சொன்னர்

पौरापवाद सुमहान तथा जनपदस्य च ।
वर्तते मयि भीवत्सा सामे मर्माणि कृन्तति ॥
अन्तरात्माहि मे वेत्ति सीतां शुद्धां यशस्विनीम् ।
ततो गृहीत्वा वैदेहीं अयोध्यां अहमागत: ।
अयं तु मे महान्वाद: शोकश्च हृदि वर्तते ।
पौरापवाद सुमहान् तथा जनपदस्य च ॥
अकीर्तिर्यस्य गीयेत लोके भूतस्य कस्यचित ।
पतत्येवाधमान्लोकान् यावच्छब्द: प्रकीर्त्यते ॥
(அத்யாயம் 45, சுலோகம் 3, 10, 11, 12)

இந்தமாதிரியாகச் சீதைக்கும் தனக்கும் இருகுலங்களுக்கும் இழிவு ஏற்பட்டு உலகத்தில் தர்மமார்க்கத்திற்கு அழிவு வருமோ என்று ராமர் நடுங்கினர். இதற்குமுன் தான் ஒருவிதத்தாலும் ஒரு காரணத்திற்காகவும் சத்தியத்தையும் தர்மத்தையும் பிளவுபடுத்தமாட்டேன் என்று கூறியிருக்கிருர்.

नैव लोभात् न मोहाद्वा नचाज्ञानात्
तमोन्वित: ।

सेतुं सत्यस्य भेत्स्यामि गुरोः सत्य
प्रतिश्रवः ॥
(அயோத்தியா காண்டம் அத்தியாயம் 109, சுலோகம் 17.)

ராமன் பரமாத்மாவின் அவதாரம் என்ற உண்மையை மறந்தாலும் ராமன் தீரோதாத்த நாயகன் என்ற விஷயத்தை நாம் மறக்கக்கூடாது. லக்ஷ்மணனை மறு மொழி கூறாமல் தன் உத்தரவை நிறை வேற்றவேணும்என்று கட்டளையிட்டார். லக்ஷ்மண பரத சத்ருக்னர்கள் மன முடைந்து பேசாமல் இருந்துவிட்டார் கள். சீதையைக் கொண்டுபோய் லக்ஷ் மணன் வால்மீகி ஆச்ரமத்தில் விட்டு விட்டார். கௌஸல்யை முதலிய தேவி களும் பேசவே இல்லை. அவர்களுக் கெல்லாம் தர்மந்தெரியாதா? லக்ஷ்மணன் பிறகு சுமந்தரரிடமிருந்து பிருகு மகரி ஷியின் சாபத்தைப்பற்றிக் கேட்டுத் தன் மனக்குறையை மாற்றிக் கொண்டார்.

உத்தரகாண்டத்தில் அனேக அத்யா யங்களில் விவரிக்கப்பட்ட விஷயத்தை இவ்விடத்தில் சுருங்கச்சொல்ல முடி யுமா? ஆனாலும் வால்மீகி மகரிஷி காளி தாசன் முதலியவர்களைக்காட்டிலும் நம்மைப்பெரியவர்களாக நாம் எண்ணிக் கொள்ளக்கூடாது. ராமாயணத்தில் சீதை சொன்னதாவது.

यच्चते वचनीयं स्यात् अपवाद समुत्तिथः ।
मया च परिहर्तव्यं त्वं हि मे परमागतिः ॥
(அத்தியாயம் 48 ச்லோகம் 13)

परमोह्येषधर्मस्ते तस्मान्कीर्तिः अनुत्तमा ।
यत्तुपौरजने राजन् धर्मेण समवाप्नुयात् ॥
(அத்தியாயம் 48 ச்லோகம் 16)

ஆகையால் உலகத்தாருடைய மனம் எக் காரணத்தைக் கொண்டாவது அற வழியிலிருந்து பிறண்டுபோகாமல் இருப் பதை முதல்தர்மமாகக் கருதியவர் ராமர். அவர் கருத்தையறிந்தவர் நாமல்ல. சீதா தேவியே.

अन्तर्गतमपि व्यक्तं आख्यातिहृदयं हृदा ।
(பாலகாண்டம் அத்தியாயம் 77, ச்லோகம் 281)

காளிதாசனுடைய ரகு வம்சத்தில் ராமர் பின் வருமாறு சொல்லுகிறார்:

किमात्म निर्वाद कथामुपेक्षे जायामदोषां
उपसंत्यजामि ।
अपि स्वदेहान्किमुतेन्द्रियार्थात् यशो धनानां
हि यशो गरीयः ॥

சீதைசொல்வதும் வெகு அழகு.

साहं तपस्सूर्य निविष्ट दृष्टिः ऊर्ध्वंप्रसूते
चरितुं यतिष्ये ।
भूयो यथा मे जननान्तरेपि त्वमेव भर्ता न च
विप्रयोगः ॥

துளசிதாசருடைய ராம 'சரிதமான ஸம்என்ற' ஹிந்திராமாயணத்திலும் ராம னுடைய செய்கை மாசற்றதாகவே விளக்கப்பட்டிருக்கின்றது. "தாய்மை யுள்ள சீதையை விட்டுவிடுவதா; வேத சாஸ்திரத்திலுள்ள தர்மத்தில் ஜனங் களுக்கு நம்பிக்கை குறைந்து நல்ல வழிகள் சீர்குலைந்து போகும்படி விட்டு விடுவதா?" என்று ராமன் மனம் ஊசலா டிக்கொண்டிருந்தது.

त्यागहुं जनकसुता बनमाहीं ।
राखहुं स्रुतिपथ धर्म न जाहीं ॥
(லவகுச காண்டம் 10)

तदापि नृपहिं चहिये सदा राजनीति धन धर्म ।
वसुधा पालहिसोच तजि * बचन प्रीति
सुचिकर्म ॥
(லவகுச காண்டம் 14)

दूतन कहा सो अपयस कहऊ * कुलकलंक यह
दरुण भयऊ ॥
तरणिवंस नृप भये अनेका * एक एकते
निपुणविवेका ॥
(லவகுச காண்டம் 15)

दशरथ दीख सदा तुम नीके * वचन न टारेउ
लालच जीके ॥

(லவகுச காண்டம் 16)

கம்பராமாயணத்தில் உள்ள விஷயத்தை அனேக அறிஞர்கள் எழுதக்கூடும். ஆகையால் அந்த விஷயத்தை நான் இங்கே விவரிக்கவில்லை.

பவபூதியின் உத்தரராம சரிதத்தில் ஏன் அந்தமகாகவி ராமாயண கதையை மாற்றினார் என்று நாம் ஆராய்ச்சி செய்யவேணும். சோகரஸம் ததும்பும் நாடகமானாலும் துக்கத்தில் முடியக் கூடாது என்று பூர்வீக நாடக சம்பிரதாயம். இப்பொழுதுதான் துக்க முடிவு நாடகங்கள் (Tragedies) எழுதக்கூடும்; எழுதவேண்டும் என்ற உணர்ச்சி எழும்பிக்கொண்டிருக்கின்றது. பவபூதியின் திறமையும் ஒரு அழகுதான். அவர் அருந்ததியின் வாயால் சீதையின் கற்பின் மாட்சிமையை அறிவித்துச் சர்வ ஜனங்களையும் சீதையை வணங்கும்படிச் செய்திருக்கிறார்.

ஆனால் சீதையை அக்கினிப்பிரவேசம் செய்வித்த வால்மீகி ஏன் அப்படிச் செய்யவில்லை? அவருக்கும் ராஜகோபாலாசாரியாரைப்போல் ராமரிடத்தில் முதலில் கோபமிருந்ததாகத்தான் எனக்கும்தோன்றுகிறது. பாலகாண்டத்தில் தன்னை उदारधी: (II, 42) சொல்லிக் கொண்டவர் உத்தரகாண்டத்தில் (XLIX) उग्रधी: என்று சொல்லிக்கொள்ளுகிறார். இந்த நுட்பமான விஷயங்களை என்னுடைய வால்மீகியைப்பற்றிய ஆராய்ச்சி நூலில் எழுதியிருக்கின்றேன்.

ஆனால் சில முக்கிய அம்சங்களை நாம் நன்கு கவனிக்கவேணும். ராமாயணம் சோகரஸத்தில் பிறந்தது. அந்த ரஸத்தின் உச்சியை சீதா பரித்யாகத்தில் நாம் காண்கிறோம். இதுவுந்தவிர ராம குணங்களைச் சொல்லும் பொழுது सर्व शत्रु को हित: என்று சொல்லப்பட்டிருக்கின்றது. தன் செய்கைகளால் தர்மத்தில் ருசியும் பாபத்தில் பயமும் ஜனங்களுக்குக் குறைந்தால் ராமன் அதைப் பொறுக்கமாட்டார். रामो विग्रहवान धर्म: மற்றும் ஒரு விஷயத்தை நாம் கவனிக்கவேணும். இதிகாசம் (Epic) நாடகம் (Drama) மாதிரியல்ல. மகாபாரதம் மகா பிரஸ்தானத்தில் முடிவடைகின்றது. பாகவதம் ஸ்ரீ கிருஷ்ணனுடைய அந்தர்தானத்தில் முடிவு அடைகின்றது. ராமாயணமும் அப்படியே. ஹோமர் மகா கவியின் இலியட் (Iliad) கூட இந்த உயர்ந்த நிலையை அடையவில்லை. தியாகம் வைராக்யம் பக்தி முதலிய உத்தம குணங்களையே பாராட்டும் நாகரீகம் நம்மவர் நாகரீகம். இன்னும் பற்பல விஷயங்களை என்னுடைய ராமாயண விமர்சனமான இரண்டு நூல்களில் (Valmiki : His mind and Art and the Riddles of the Ramayana) நான் விவரித்திருக்கின்றேன் ஸி. வி. வைத்ய (C. V. Vaidya) கூறும் ஒரு விஷயத்தை மட்டும் இவ்விடத்தில் எழுதி அதைக் கவனிக்கும்படி ராஜகோபாலாசாரியாரை வேண்டிக் கொள்ளுகிறேன். "The Painful sequel of the recital of the poem viz. the disappearance of Sita has so beautifully been conceived that even if the incidents were supposed to be imaginary none but the great poet himself could have conceived them. In fact, they strike us as part and parcel of -the epic."

நாம் சின்ன புத்தியும் ஹிருதயமும் உள்ளவர்கள். நம்முடைய ஆழாக்குப் போன்ற மனதைக்கொண்டு பெரியார்களின் கடல்போன்ற மனதை அளக்க முடியாது. சிபிசக்கரவர்த்தி தன் ஊனையே வெட்டிக்கொடுத்தார் என்றால் நமக்குநம்பிக்கை வராது. ஹரிச்சந்திரன் சத்தியத்திற்காக வெகு துயரங்கள்

(தொடர்ச்சி 89-ம் பக்கம் பார்க்கவும்).

பண்டைகாலக் கடற்படை

தி. நா. சுப்பிரமணியன்

பண்டைக்காலத்தே நம்நாட்டுமக்கள் 'அலைகடல் நடுவுள் பலகலம் செலுத்தி'த் தூர தேசங்களுக்கும் சென்று குடியேறி வந்தனர் என்ற செய்தியை யாவரும் அறிவர். அவர்கள் சென்ற இடங்களில் எல்லாம் இந்நாட்டுக் கலாசாரத்தைப் பரப்பி வந்தனர். இந்துமகா சமுத்திரத்தைச் சூழ்ந்துள்ள பல நாடுகளிலும் இந்தியமக்களின் சின்னங்களைக் காண்கிறோம். வெகு தூரத்திலுள்ள தென் அமெரிக்காவிலும், இந்திய கலாசாரம் வழக்கில்உள்ளது என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

எனினும் இந்தியர்கள் ஒரு காலத்திலும் கடலில் ஆதிக்கம்பெற்று விளங்கவில்லை யென்றே ஆசிரியர்கள் கருதுகிறார்கள். சென்ற நாலைந்து நூற்றாண்டுகளில் ஐரோப்பியர்களே கடலில் ஆதிக்கம்பெற்று விளங்கி வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு முன்னர் அராபியரும் சீனரும் அந்தப்பதவியில் இருந்தனர். அவர்களுக்கும் முன்னாலே, யவனர்களும் பொனீசியர்களும், இவ்விதமாக இந்தியர்கள் தங்களுக்கெனத்தனியான பெருமையைப் பெற்றிருக்க வில்லை என்றே வாதிப்பர்.

நம் நாட்டு மக்கள் என்றைக்கும் பிற நாடுகளைக் கைக்கொண்டு அந்த இடங்களிலே அரசு செலுத்தி ஏகசக்ராதிபதியாக விளங்கவேண்டும் என்றஆசையை கொண்டதில்லை. எல்லா இடங்களிலும் தங்கள் கலாசாரத்தைப் பரப்புவதை முக்கிய நோக்கமாக கொண்டிருந்தார்கள். அன்றி, அவ்வப்போது பிற நாடுகளை வென்று அடிப்படுத்திய காலங்களிலும், திக்கு விஜயத்தில் தங்கள் போர்த்திறமையை வெளிப்படுத்தித் தங்கள் புகழை நிலைநிறுத்த விரும்பினார்களேயன்றி, அவற்றைக் கட்டி ஆளவேண்டும் என்று எண்ணவில்லை. அதனாலே அவர்கள் கடலில்செலுத்திவந்த ஆதிக்கத்தைப் பற்றி நாம்அதிகமாக அறியமுடியவில்லை.

நம் நாட்டவர்களும் ஒரு காலத்தில் திறமை வாய்ந்த கடற்படையை வைத்திருந்தார்கள் என்பது பழைய நூற்குறிப்புகளாலும் சாஸனங்களாலும் வெளியாகின்றது. கடற் படையைக் குறிக்கும் நாவி (Navy) என்னும் ஆங்கிலப்பதமும் அதற்கு அடிப்படையான லத்தீன் முதலிய பாஷைச் சொற்களும், நாவாய் என்னும் தமிழ்ச்சொல்லும் வடமொழிப் பதமான नौ (Nau) என்பதன் வழிப்பிறந்தனவே என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள்.

கௌடில்யர் எழுதியுள்ள அர்த்தசாஸ்திரத்தில் நாவத்யக்ஷர் என்னும் கப்பல்களின் அதிகாரியைப் பற்றிய குறிப்பு காணப்படுகின்றது. 'கொள்ளைக் கப்பல்களையும், எல்லையைத்தாண்டிவரும் எதிரி நாட்டுப் படகுகளையும், துறைமுகப் பட்டினங்களிலே அனுஷ்டிக்கப்படும் விதிகளையும் சங்கத்தையும் மீறும் கலங்களையும் அவர் தூரத்திச் சென்று அழித்தல் வேண்டும்'. இதனை நாம் கவனித்தால், அவர் தம் கடமையை நிறைவேற்ற நன்றாகப் பயிற்சிபெற்றுத் திறமைவாய்ந்த கடற்படை அவசியம் என்பதும் அது இல்லாவிடில் அவரால் ஒன்றும் செய்ய இயலாது என்பதும் விளங்கும்.

மநுசம்ஹிதை 'நீர் நிறைந்த இடங்களில் போரைநடத்தப் படகுகள் அவசியம்' என்று கூறுகின்றது. காமந்தகநீதி சாஸ்திரத்தில் 'முறையான பழக்கத்தில் ஒருவன் ரதம், குதிரை, யானை, படகுகளிலிருந்து போரிடுவதில் சமர்த்தனாகவும் வில் வித்தையில் வல்லவனாகவும் ஆவான்' என்று காணப்படுகின்றது. மஹாபாரதத்திலும் சாந்திபர்வத்தன்

கடற்படை, சேனையின் அங்கங்களுள் ஒன்ருகும் என்பது சொல்லப்பட்டுள்ளது.

போஜன் எழுதியுள்ள யுக்திகல்பதரு என்னும் நூலிலே பலவகையான மரக்கலங்களைப் பற்றிக் கூறப்படுகின்றன. அவற்றுள் 'சுக்ரமந்திரம்' என்பதும் ஒன்று. போர் செய்வதற்கு அனுகூலமாக வீரர்கள் தங்கும் இடத்தை முன்புறத்தில் அமைத்துவைத்திருப்பதாலேயே அவ்வகை அந்தப் பெயரைப் பெற்றது. இவற்றைக் கவனித்தால் கடற்படையையும் அதனை நிர்வகித்து நடத்துவதையும் பற்றிப் பண்டை அரசாங்கங்கள் நன்ருக அறிந்து கொள்வதுடன் நில்லாமல் பழக்கத்திலும் கையாண்டன என்பதை யறியலாம்.

இவ்வுண்மை சரித்திர வாயிலாகவும் வெளியாகின்றது. பண்டைக் காலத்திலிருந்து பார்த்து வந்தால் தொடர்ச்சியாக ஒவ்வொரு அரசாங்கமும் கடற்படை வைத்திருந்ததைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

கடற்கரையை யடுத்திருந்த பகுதிகளிலே நிறுவப்பட்ட அரசாங்கங்களும் கடற்கரையை உடையனவுமே அத்தகைய படையை வைத்து நிர்வகித்துப் புகழ்பெற்று வந்தன. நம் பாரத கண்டத்தில் தென்னடு, வங்காளம், சிந்து நதிக்கரைப் பிரதேசம் ஆகிய மூன்று இடங்களினுமே கடற்படை பெருமை பெற்று விளங்கியது.

வங்க நாட்டவர் தமிழ் நாட்டவர்களுடன் போட்டி போட்டுக்கொண்டு சாவகம், சீனம் முதலிய தேசங்களுக்கும் பண்டைநாளில் போய் வந்தனர். காளிதாஸனும் வங்க தேசத்தவரைப் படகு செலுத்தும் கலையில் தேர்ந்தவர்கள் என்று குறிப்பிட்டுள்ளான்.

ஸிந்துநதிக் கரைப் பக்கத்தே இருந்த கடற்படை பெரிதும் கடற்கொள்ளை நடத்திவந்தனவென்றே பிராபல்யமடைந்து வந்திருக்கின்றன. மேலைக் கடற்கரை யோரமாக நடந்த கடற்கொள்ளை சரித்திரப் பிரசித்தம்.

தென்னுட்டிலே ஆண்டுவந்த பழைய தமிழ் வேந்தரான முடியுடை மூவரும் வைத்திருந்த கடற்படையைப் பற்றிச் சங்க நூல்களில் காணும் குறிப்புகளை நாம் மீண்டும் எடுத்துக் காட்ட வேண்டியதில்லை.

தமிழ் நாட்டை யடுத்தாற்போல் வேங்கிதேசத்தைப் பண்டைக்காலத்தே ஆண்டுவந்த 'சாதவாகனர்கள்' என்னும் ஆந்திர வம்சத்து அரசர்களின் நாணயங்களில் இரண்டு பாய்மரங்களைக்கொண்ட கப்பலின் உருவம் ஒருபுறம் காணப்படுகின்றது. அது அவர்களுடைய கடற்படையின் வலிமையை எடுத்துக் காட்டுவதாகவே சரித்திர ஆசிரியர்கள் கருதுவர்.

காஞ்சிபுரத்திலிருந்தும் தமிழ்நாட்டின் பெரும் பகுதியை ஒரு குடைக்கீழ் ஆண்டுவந்த பல்லவமன்னர்களும் கப்பற்படை வைத்திருந்தனர். வாதாபி கொண்ட நரஸிம்ஹவர்மன் காலத்திலிருந்து இவர்கள் இரண்டு மூன்று தடவைகள் இலங்கையை வென்ற செய்தியையும் சரித்திரம் அறியும்.

அதுமட்டு மன்று. அந்தக் காலத்திலே வங்காளக்குடாக்கடலையும் தங்கள் ஆதிக்கியத்தில் ஒரு சமயம் கொணர்ந்தனர்.

காடவர்கோன் கழற்சிங்கன் என்று சுந்தரமூர்த்தி சுவாமிகளால் புகழப்பெற்ற சிவனடியாரான ராஜஸிம்ஹவர்மன் காலத்தே நிகழ்ந்தது அது.

லிச்சவிகளைப் (Licchavi) போன்ற திபேத் நாட்டவர்களால் அடிக்கடி சீன ஸாம்ராஜ்யத்துக்கு உபத்திரவம் நேர்ந்துவந்தது. அவர்கள் இந்தியாவிலும் புகுந்து வடநாட்டின் பெரும் பகுதியைத் தங்கள் ஆதிக்கியத்தில்

கொணர்ந்து விட்டனர். வங்காளம் அவர்களுக்கு அடிபணிந்தது. வங்காளக் குடாக்கடல் என்று இப்போது வழங்கப் பெறுவது அக்காலத்தே 'திபேத்தின் உரி'யாக மாறிவிட்டது.

லக்ஷத்தீவுகளும் (Laceadives) அவர்கள் வசம் சிக்கிக்கொண்டன. அது நம் நாட்டினின்றும் கடவாததுக்கும் சீனத்துக்கும் கடலில் போகும் மரக்கலங்களுக்கு இடையூறாக நேர்ந்தது.

அன்றி அராபியர்களும் திபேத்தியர்களுக்கு உதவியாக இருந்தனர். அதனால் கடற்கொள்ளைகளை ஒழித்துக் கடலை ராஜபாதையாக மாற்றி உதவ வேண்டும் என்று சீனச்சக்கரவர்த்தியே தூதுவரையனுப்பி ராஜஸிம்ஹனை வேண்டிக்கொண்டார். அதற்கு அவரும் உதவுவதாக வாக்களித்தார்.

அதே போலப் பல்லவ அரசனும் தண்டு எடுத்துக் கலங்களைக் கடலில் நடத்திச்சென்று லக்ஷத்தீவுகளை வென்று வாகை சூடினான். இது சீனதேசச் சரித்திரக் குறிப்புக்களாலும் வாயலூர்க் கல் வெட்டாலும் வெளியாகின்றது.

இந்த வெற்றியின் விளைவாகவே நாகப்பட்டினத்தில் சீனதேசத்து வியாபாரிகள் எழுப்பிய புத்த விஹாரத்துக்குச் சீனச் சக்ரவர்த்தி "தர்மாலயம்" என்ற பொருளைக்கொடுக்கும் "கோயிஹோவர்" (Koei Hoa) என்னும் பெயரையளித்து அந்தப்பெயரைப் பொறித்த பளிங்குக்கல்லையும் அனுப்பிவைத்தார்.

அப்பால் சோழஸாம்ராஜ்யம் ஏற்பட்ட பிறகு சோழர்கள் கடற்படையின் உதவியாலே பல வெற்றிகளை அடைந்திருக்கிறார்கள்.

பாகேசரிவர்மன், கலிமன் செய்ததைப் போலக் கடல் அணையாது இலங்கை கொண்டதையும், ராஜராஜன் முதலாகப் பல மன்னர்களும் சாந்தனார்ச் சாலையில் கலம் கறுத்ததையும் யாவரும் அறிவர்.

கங்கைகொண்ட சோழனான ராஜேந்திரன் கடாரம் முதலிய நாடுகளை வென்று பெரும்பாகம் பெற்றான். குலோத்துங்கனும் அவன் அடிச்சுவட்டைப் பின்பற்றிப்பல வெற்றிகளைக்கடற்படை மூலமாக அடைந்திருக்கிறான்.

இவ்விதமாக, நம் நாட்டுச் சரித்திரத்தையும் நாம் ஊன்றிப் பார்த்தால், பண்டைக்கால முதலே நம் நாட்டு மன்னர்கள் கடற்படையைத் தனியாக வைத்துப் பராமரித்து அதன் உதவியால் பலவெற்றிகளைக் கொண்ட செய்தி விளங்கும்.

சந்தாதார்களுக்கு

பாரதமணி இதழ்கள் உரிய காலத்தில் வந்து சேராவிட்டால், அந்தந்த ஆங்கிலமாத முடிவுக்குள் தெரிவிக்க வேண்டும். இல்லாவிடில் காரியாலயத்தார் ஒன்றும் செய்ய முடியாதென்று தெரிவித்துக் கொள்கிறோம்.

'பாரதமணி' காரியாலயத்தார்.

தொன்மைத் தொண்டர்

மு. அருணசலம் எம். ஏ., தியாகராயநகர்

எனது நண்பர் தொன்மைத் தொண்டரை வெகு சிலருக்கே தெரியும். தெரிந்தவர்கள் அனைவருமே அவரை மிகவும் பிற்போக்கான பேர்வழி என்றே கருதுவார்கள். இவர்கள் கருதுவது அவ்வளவு சரியன்று. எல்லாத் துறைகளிலும் மிக்க முற்போக்குடையவராயிருக்கவேண்டுமென்று நண்பர் முயல்வது உண்மை. ஆனல், ஒன்றிலும் அப்படி யிருக்கமாட்டார். காரணம், முற்போக்கென்று கருதுகிற ஒவ்வொரு செயலுக்குமே, பழமையான ஆதாரம் இருக்கவேண்டுமென்று அவர் நினைப்பது தான். நாம் மேற்கொள்ளும் எந்தப் புதிய வழக்கத்துக்கும், இலக்கியத்திலாவது, பழக்கவழக்கத்திலாவது, வேறு எதிலாவது ஆதாரம் கிடைக்கவேண்டுமென்பதே அவர் கொள்கை. காலத்துக் கேற்ப நாம் செய்யும் செயல்கள் யாவற்றுக்கும் இப்படிப் பழமையில் ஆதாரங் காணமுடியுமா? முடியாது. எனவே, இந்த நண்பர் புதிதாக எந்த வழக்கத்தையுமே கைக்கொண்டதில்லை. காப்பி குடிக்கமாட்டார். (காப்பியானது உடலுக்குக் கேடு பயக்கும் என்ற கருத்தினலன்று.) தலைமயிர் கத்தரித்துக் கொள்வதற்குக்கூடப் பெரிதும் தயங்குவார் என்று சொல்லிவிட்டால், வேறு இவரைப்பற்றி விவரமாக எதுவும் சொல்லவேண்டியதில்லை

இப்படிப்பட்ட காரணங்களாலேயே இவருக்குத் 'தொன்மைத் தொண்டர்' என்ற அழகிய பட்டம் வந்தது.

பி. ஏ. பரீட்சையில் இவர் தேறிய சமயம், நான் இவர் வீட்டுக்குப் போய் இருந்தேன். பரீட்சையில் தேறியதற்கு எனது பாராட்டுதலைத் தெரிவிக்கும் பொருட்டு, உற்சாகமாக இவர் கையைப் பிடித்துக் குலுக்கினேன். அப்போது பார்க்கவேண்டுமே அவருக்கு வந்த கோபத்தை! (பரீட்சை தேறியதற்காக வன்று; நான் கையை குலுக்கியதற்காக!)

"விடப்பா கையை! இதெல்லாம் என்ன கெட்ட வழக்கம், கையைப்பிடிக்கிறதாம், குலுக்குகிறதாம்! வேடிக்கையாயிருக்கிறது!" என்றார்.

"இதிலென்ன கெட்ட வழக்கம் வந்து விட்டது?" என்று கேட்டேன்.

"இதிலென்ன கெடுதலா? உன் கையைப்பார். அதிலிருக்கும் மசியும் அழுக்கும் என் கையில் ஒட்டிக்கொள்ளாதா? நீ குலுக்கின குலுக்கலிலே என் கைவேறு சுளுக்கிக்கொள்ளும் போலிருக்கிறது வேண்டாம் இந்த வழக்கமெல்லாம்! அர்த்தமில்லாமல் வெள்ளைக்காரர்கள் செய்வதைப் பார்த்து அப்படியே 'காப்பி' யடிக்கிறது!" என்று உரத்துக் கூச்சல்போட ஆரம்பித்தார்.

நண்பர் மனம் அப்போது இருந்த நிலையிலே, அவரோடு வாதம் செய்வது உசிதமல்ல வென்றெண்ணி நான் பேசாமலிருந்துவிட்டேன்.

இப்படிப்பட்ட 'கட்டுப்பெட்டி', எவ்வளவுதான் முற்போக்கடைய விரும்பிய போதிலுங்கூட, பிற்போக்காளர் என்ற அவச்சொல்லை நீக்கிக்கொள்ள வழியுண்டா?

இந்த நண்பர், பொங்கலன்று சாப்பாடெல்லாம் முடிந்தபிறகு என் வீட்டுக்கு வந்தார். 'வரவேண்டும்' என்று உபசாரம் சொல்லி, இரண்டு கைகளையும் மரியாதையாகக் குவித்து கும்பிட்டு வரவேற்றேன். அவர் சமாசாரந்தான் தெரியுமே!

ஆனால், அவர் என்னுடைய குவித்த கையை லட்சியம் செய்தவராகவே தெரியவில்லை. நேரே என் அருகில் வந்தார். வந்து, என் வலக்கையைத் தமது வலக்கையால் பற்றி அப்படியே ஒரு குலுக்குக் குலுக்கினர். குலுக்கிக் கொண்டே, "பால் பொங்கிற்று!" என்று விசாரித்தார்.

அவர் செய்த செய்கை என்னை அப்படியே தூக்கிவாரிப் போட்டுவிட்டது. 'இவரா நமது நண்பர்' என்றே எனக்குச் சந்தேகம் வந்துவிட்டது. 'பொங்கிற்று, பொங்கிற்று, சந்தோஷம்' என்றெல்லாம், அவருக்கு மறுமொழியாக ஏதேனும் உளறியிருப்பேன். என்னுடைய தடுமாற்றத்தை உணர்ந்தவர் போல, அவரே சிரித்தபடியே கேட்டார்.

"என்ன, ஒரேயடியாய் முழிக்கிறாய்! உன் கையைப்பிடித்து நான் குலுக்கினதில் உனக்கு இவ்வளவு வியப்பாயிருக்கிறதா?"

"வியப்பொன்றுமில்லை. நீ, நீதானா என்பது எனக்குச் சந்தேகமாயிருக்கிறது. நீ, நீதானே, வேறு பேர்வழியல்லவே?" என்று கேட்டேன்.

"ஏன் அப்படிக் கேட்கிறாய்?"

"கைகுலுக்குவது சுத்த அநாகரிகம், கேவலம், காட்டுமிராண்டிகள் வேலை என்று நீ சொல்லுவாயே, இப்போது உனக்கு என்ன நேர்ந்துவிட்டது?" என்றேன்.

'எனக்கு ஒன்றும் புதிதாக நேர்ந்துவிடவில்லை. இத்தனைநாளும் தெரியாதிருந்ததோர் அரிய செய்தியை இன்று கண்டுகொண்டேன். அவ்வளவுதான்" என்றார் நண்பர்.

"அதென்ன அவ்வளவு அரியசெய்தி?"

"அதுதான் இந்தக் கைகுலுக்குகிற விஷயம். பூர்வமாக இது தமிழர்களுக்குரிய ஒரு வழக்கம். மேல்நாட்டினர் இதை நம்மிடமிருந்துதான் கற்றுக் கொண்டார்கள். நாமோ, இவ் வழக்கத்தை மறந்தே விட்டோம்!"

எனக்கு, முன்னிருந்த ஆச்சரியம் போய்விட்டது. ஆனால், புதிதாக ஒரு சந்தேகம் உண்டாயிற்று. கீழ்ப்பாக்கத்திலே ஓர் ஆஸ்பத்திரி இருக்கிறதாகச் சொல்வார்களே, அங்கிருந்துதான் நண்பர் தப்பி வெளியில் வந்துவிட்டாரோ?

என்னுடைய சந்தேகத்தை அவர் உணர்ந்துகொண்டார். என் கேள்வியை எதிர்பார்த்து அவராகவே சொல்லலானார்: "எனக்கு மூளைக்கோளாறு ஒன்றும் கிடையாது; அதுபற்றி நீ கவலைப் படாதே. சுய அறிவோடுதான் பேசுகிறேன். கைக்குலுக்குகிற இந்தப் பழக்கம் நம்மிடையில்தான் ஆதியில் இருந்ததென்பது உண்மை. பழைய காலத்திலே வியாபாரத்துக்காக இந்நாடு வந்த யவனர் முதலியோர் நம்மிடமிருந்து இதைக் கற்றுக்கொண்டு போனார்கள். ஐரோப்பா, அமெரிக்கா முதலிய நாடுகளெங்கும் இப்பழக்கம் பரவலாயிற்று. ஆனால், தாய்நாடாகிய தமிழ்நாட்டில் இது எப்படியோ மறைந்துபோயிற்று. எவ்வளவோ அரிய நூல்களெல்லாம் மறைந்துவிட்ட இந்தத் தமிழ்நாட்டிலே, இந்தச் சாமானிய பழக்கம் மறைந்து போவதா பெரிய காரியம்! மறந்துபோன இந்தப் பழக்கத்தை, இவ்வளவு காலங்கழித்து இந்த இருபதாம் நூற்றாண்டில், நம் மக்கள் இப்போதுதான், ஆங்கிலேயரிடமிருந்து கற்றுக்கொள்ள ஆரம்பிக்கிறார்கள்!"

"நல்லது, நீ இப்படிச் சொல்வதற்கு என்ன ஆதாரம்!" என்று கேட்டேன்.

"அப்படிவா வழிக்கு. கொஞ்சம் நம்பிக்கையோடு கேள். என் ஆதாரத்தையெல்லாம் விளக்கமாகச் சொல்கிறேன்."

"நம்பிக்கை பிறக்கும், நீ சொல்வதை அப்படியே ஒப்புக்கொள்வேன் என்று

நான் உறுதி கூறமாட்டேன். நீ சொல்வதைச்சொல். பொருத்தமாயிருந்தால், நம்பிக்கை தானே பிறக்கிறது."

"சரி சொல்கிறேன், கவனமாய்க் கேள்" என்று கூறிவிட்டு, நண்பர் மேலும் பேச ஆரம்பித்தார்: "டாக்டர் ஐயரவர்களை உனக்குத் தெரியுமல்லவா?"

"தெரியாமலென்ன, நன்றாகத்தெரியும் ஆனால், அவர்கள் காலஞ்சென்றுவிட்டார்களே! இப்போது எப்படி உனக்காக வந்து கூண்டிலேறிச் சாட்சிகூறப் போகிறார்கள்?" என்று கேட்டேன்.

"ஆனாலும் உன்னைப்போல் பதட்டம் கூடாதப்பா. ஐயரவர்கள் காலஞ் சென்றுவிட்டார்களென்றால், அவர்கள் நமக்கு அளித்துப்போன தமிழ் இலக்கியச் செல்வமுமா போய்விட்டது? அது இருக்கத்தானே செய்கிறது?"

"சரி, மேலே ஆகட்டும். உன் சாட்சியைக் கூப்பிட்டுவிடு எனக்கு ஆட்சேபமில்லை" என்றேன்.

"சேரமான் என்றால் உனக்குத் தெரியுமா?"

"ஆம், கொஞ்சம் கேள்விப்பட்டிருக்கிறேன். காட்டிலே திரிகிற மானல்லவென்று தெரியும்; ஏதோ சேரநாட்டிலிருந்த பழையகாலத்து அரசர் ஒருவரே சேரமான். சரிதானே?"

"ரொம்பசரி. சேரமான் என்பது, சேர மன்னரைக் குறிப்பிடுவதற்குப் பொதுவாக வழங்குகிற ஒரு கௌரவமான பெயர். அவ்வளவுதான். சேரர் பரம்பரையிலே, சேரமான் செல்வக் கடுங்கோ ஆழியாதன் என்ற பெயருடைய முடிமன்னரொருவர் இருந்தார்."

"எப்போது?"

"பழய காலத்திலே; அதாவது, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே என்று வைத்துக்கொள். அந்தக்காலத்திலே, தமிழ்நாட்டின் நிலைமையும், முக்கியமாக, அரசர்களுடைய இயல்புந் தான் உனக்குத் தெரியுமே!"

"என்ன, அவர்களுடைய வீரத்தைப் பற்றிச் சொல்கிறாயா அல்லது கொடைத் திறத்தைப் பற்றிச் சொல்கிறாயா?" என்று கேட்டேன்.

"கொடையைத்தான் சொல்ல வந்தேன். இந்தச் சேரமானும், பெரிய வள்ளலென்று புகழ்பெற்றவன் கபிலர் என்ற புலவரிடத்திலே இவனுக்கு மிக்க ஈடுபாடிருந்தது. இவன்மீது அவர் ஒரு சமயம் பாடிய பத்துப் பாட்டுக்காக, மிக்க மகிழ்ச்சியடைந்து ஒரு லட்சம் பொன்னை அவருக்குப் பரிசிலாகக் கொடுத்தான். அதனோடுகூட, தன் நாட்டிலே ஒரு மலைமேல் ஏறி நின்று கண்ணுக்குத் தெரிந்த தூரம்வரையுள்ள நாட்டையெல்லாம் அவருக்குத் தானம் செய்துவிட்டான். சேரமான் இத்தகைய சிறந்த வள்ளல்."

"சரி ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால், இதற்கும், நீ சொல்லிய பழக்கத்துக்கும் என்ன சம்பந்தமென்பதுதான் எனக்குக் கொஞ்சமும் விளங்கவில்லை" என்றேன்.

நண்பர் சிரித்துக்கொண்டு சொல்லுகிறார்: "அதைத்தானப்பா சொல்லவருகிறேன். பொறுமையாகக்கேள். சேரமானைப்பற்றிச் சொன்னேனல்லவா? இந்தச் சேரமானும் கபிலரும் நெருங்கிய நண்பர்களாயிருந்தார்கள். கபிலர் ஒரு சமயம், சேரனிடம் விடைபெற்று, தம் மற்றொரு நண்பனாகிய பாரியைப் பார்க்கப் போயிருந்தார். போனவர், பாரியோடு நெடுநாள் தங்கிவிட்டார். கபிலர் வரவில்லையே, வரவில்லையே என்று சேரமான் பெரிதும் ஏங்கி, அவர் வரவையே எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். இந்த நிலையிலே ஒருநாள் அவரும் வந்துசேர்ந்தார். சேரமானுக்குமிக்க உற்சாகம். அப்படியே கபிலரைக் கட்டித் தழுவிக்கொண்டான். தழுவி, தன் உற்

சாக மிகுதியினலே, அவர் கையைப் பற்றிக் குலுக்கினன்."

"நீ சொல்வது நன்ருயிருக்கிறதே! கைகுலுக்குவது தமிழ்நாட்டில் வழங்கிய பழையவழக்கமென்பதற்கு ஆதாரங் காட்டுகிறேனென்று சொல்லி, ஏதோ கதையெல்லாம் அளக்கிருயே! இவ்வளவும் உன்னுடைய கற்பனைதானே! இது ஆதாரமாகுமா?" என்று நான் இடைமறித்தேன்.

"ஆதாரத்தைதான் காட்டவருகிறேன் முற்றும் கேட்டுவிடு. பிறகு நீயே முடிவு செய்துகொள்ளலாம்" என்று கூறிவிட்டு நண்பர் மேலும் சொன்னர்: "மகிழ்ச்சி மிகுதியினலே கபிலர் கையைப் பற்றிச் சேரமான் குலுக்கினனு? குலுக்கிய போது, அவர் கை மிருதுவாயிருந்ததாக அவனுக்குத் தோற்றிற்று. உடனே தன் கையைத் தொட்டு அழுத்திப் பார்த்துக் கொண்டான். தன் கையோ, கல்போலக் கடினமாயிருந்தது. புலவர் கை மட்டும் மென்மையாயிருக்கக் காரணமென்ன வென்று எண்ணிப்பார்த்தான் ஒரு காரணமும் புலப்படவில்லை. அவரைக் கேட்டான்.

"நாமும் நம் நண்பரொருவர் நம்மைப் பிரிந்து எங்கேனும் போயிருந்து நெடுநாள்கழித்து வந்தால், சாதாரணமாகக் கேட்பதுண்டல்லவா, 'ஊருக்குப் போனதிலே மிகவும் கறுத்துப்போய்விட்டீர்களே' அல்லது, 'என்ன, ரொம்ப இளைப்பாய்த் தெரிகிறதே, அலைச்சல் அதிகம் போலிருக்கிறது' என்று? இந்த விதமாகத் தான் கபிலரைப் பார்த்துச் சேரமானும்,' என்ன ஐயா, தமது கை மிக்க மிருதுவாயிருக்கிறதே!" என்று விசாரித்தான்.

"கபிலர் சொல்கிருர்: 'ஆம், அரசே என்னுடைய கை மெல்லியதாயிருப்பது உண்மை. உன்னுடைய கையால் என் கையைப் பற்றியபோது, என் கை மென்மையாயிருப்பதை நீ அறிந்தாய். ஏன்? உன் கை திண்மை பொருந்தியதாய், வலியதாயிருந்ததினலே. ஆனல், உன் கை ஏன் வலியதாயிருக்கிறது? இதற்குக் காரணங்கள் எத்தனையோ! எத்தனை பகைவர்களுடைய கோட்டை வாயிலைத் தகர்த்தெறியவேண்டி, உன் களிற்றின் பிடரிமீதிருந்து கையிலே அங்குசத்தைப் பிடித்து, கோட்டை வாயிற் கதவுகளைப் பெயர்த்தெறியுமாறு களிற்றைத் தூண்டியிருக்கிருய்? அது போகட்டும். உனது அழகிய குதிரை மீதமர்ந்து, அதன் தலைக்கயிற்றைக் கையிலே வலிவாகப் பற்றிக்கொண்டு பகைவர் மதிற்புறத்து அகழியைத் தாண்டச்சொல்லி அக்கயிற்றை வெட்டி வெட்டி இழுத்து உன் குதிரையை எத்தனை முறை இயக்கி யிருக்கிருய்? இதுவும் போகட்டும். தேரிலே நின்று, வில்லிலே நாணைப்பூட்டி, அம்பருத் தூணியிலிருந்து அம்புகளை உருவி, நாணை இழுத்து அம்புமாரியைப் பெய்து எத்தனைப் பகைவர் வெள்ளத்தைச் சிதற அடித்திருக்கிருய்? இவ்வளவும் செய்த வலிபொருந்திய உன் கைகள்—முழந்தாள் வரையும் நீண்டு வளர்ந்த உன் கைகள்—காய்ப்பேறிக் கடினமாகாமல் என்னசெய்யும்? பரிசில்களையும் பொன்னுபரணங்களையும் என்போன்ற புலவர்க்கும் இரவலர்க்கும் எடுத்துக் கொடுத்துக் கொடுத்து, உன் கைகள் காய்ப்புத் தழும்பு ஏற்பட்டுக் கடினமாகிவிட்டன.

பரிசிலர்க்கு அருங்கலம்
நல்கவும், குரிசில்!
வலிய ஆகும், நின்
தாள் தோய் தடக்கை!

ஆனல், என் கைகள் மெல்லியவாயிருக்கின்றன வென்று சொன்னயே! இதுவும் உண்மைதான். என் கை என்ன செய்கிறது? கடினமான காரியங்களைச் செய்து வருந்துகிறது. அப்படி என்ன காரியமென்று கேட்பாயோ? நல்ல அறுசுவை உண்டி, நெய், தயிர், கறிசோறு முதலியவை யெல்லாம் தட்டாமல் நீ அளிக்கிருயல்லவா? இவற்றை அள்ளி யள்ளி வாய்க்கு ஊட்டுகிற பெரிய கஷ்டமான காரியத்தைச் செய்து என் கைகள் வருந்தின. இதனல் இவை மெல்லியதாகவே இருக்கின்றன:

கறிசோறு உண்டு
வருந்து தொழில் அல்லது,
பிறிது தொழில் அறியா
ஆகலின், நன்றும்
மெல்லிய, பெரும்!—நிற்
பாடுநர் கையே!

உண்பதாகிய ஒரு தொழிலைத் தவிர வேறு தொழில் என் கைகளுக்குத் தெரியாதாகையினாலே அவை மிகவும் மென்மையாகவே இருக்கின்றன; என் கைகள்மட்டுமா? உன்னைப்பாடும் புலவர் அனைவருடைய கைகளுமே இப்படியிருக்கின்றன என்று முடித்தார் கபிலர்."

இந்த வரலாற்றை நண்பர் சொல்லி நிறுத்தினர். நான் கேட்டேன்: "இதெல்லாம் எதற்கு? இது புறநானூற்றுக் கதைதானே? இலக்கியத்திலே எங்கோ பழமையாகக் கண்ட ஒரு குறிப்பை வைத்துக்கொண்டு இவ்வளவு தூரம் வாதாடலாமா?" என்றேன்.

"இது ஆதாரமாகாதென்றால், வேறு உனக்கு எதை ஆதாரங்காட்டுவது? இவ் விஷயம் மிக்க தெளிவாயிருக்கிறதே! சேரமான் புலவர் கையைப் பற்றிக் குலுக்கினன். கை மென்மையாயிருக்கிறதே என்று ஆச்சர்யப்பட்டான். இதில் ஆச்சரியத்துக்கு இடமில்லையென்று புலவர் விளக்கமாகச் சொன்னர். அவர் சொல்லியதிலிருந்து, அரசன் அவர் கையைப்பிடித்துக் குலுக்கினனென்பதும், இப்படிக் கைகுலுக்குவது அக் காலத்து வழக்கமென்பதும் ஏற்படவில்லையா? பாட்டிலும், பாட்டின் சந்தர்ப்பத்தைக் கூறும் குறிப்பிலும் எல்லாம் தெளிவாய்ச் சொல்லியிருக்கும் போது, இதைவிட வேறென்ன அத்தாட்சி வேண்டும்? இதை நீ ஒப்புக்கொள்ள முடியாதென்றால், வேறு உனக்கு எதைத்தான் காட்டுவது?" என்று நண்பர் அலுத்துக்கொண்டார்.

"ஒப்புக்கொள்ள முடியாதென்று நான் மறுக்கவில்லை. இதைமட்டிலும் ஆதாரமாகக்கொண்டு, கை குலுக்குகிற பழக்கம் பழமையானதுதான், தமிழ் நாட்டுக்குரியதுதான் என்று முடிவு கட்டிவிடலாமா? வேறு எங்கேயாவது இலக்கியத்திலே இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறதா? இல்லையே! ஆகவே, இந்த ஒரேயொரு குறிப்பைமட்டும் கொண்டு நீ சொல்வதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை."

நண்பர் சிரித்தார். "வேறு ஆதாரம் என்னால் காட்டமுடியாதென்றெண்ணித்தானே நீ இப்படிப் பேசுகிறாய்?" என்றார்.

"காட்டமுடியாததுமட்டுமன்று. வேறு ஆதாரம் எப்படி இருக்கமுடியும்? இந்தப்பழக்கம் இருந்திருந்தால்தானே ஆதாரம் கிடைக்கும்? பழக்கமே கிடையாதென்பதல்லவா என் கட்சி? உன்னுடைய கற்பனைத் திறத்தை வேண்டுமானல் நான் பாராட்டத் தயாராயிருக்கிறேன்" என்றேன்.

"சரி, அதுபோகட்டும். வேறொரு விஷயம் உன்னைக் கேட்கிறேன். சிவஞான சித்தியார் என்று நீ கேள்விப்பட்டிருக்கிறாயா?" என்றார் நண்பர்.

"அவர் யாரப்பா சிவஞானச் செட்டியார்? உன்னைப்போல ஏதாவது இருக்கா? கை குலுக்குவதுபற்றி ஏதேனும் கட்டுரை அல்லது புத்தகம் எழுதியிருக்கிறரோ?"

நண்பருக்குச் சிறிதே கோபம்வரும் போலிருந்தது. ஆனாலும், சிறித்துக்கொண்டே சொன்னர்: 'செட்டியாரல்ல சித்தியாரென்று நான் சொன்னேன். உனக்குக் கொஞ்சம் மண்டை கர்வம் அதிகமாயிருக்கிறது. ஏதோ தமிழில் இரண்டொரு புத்தகங்களைப் படித்துவிட்டு, எல்லாந் தெரிந்ததாகப் பாவனை பண்ணிக்கொண்டிருக்கிறாய். தெரியாதென்பதையே நீ இன்னும் தெரிந்துகொள்ளவில்லை."

"சரி, இந்தச் சித்தியாரென்பவர் யார்?"

"சித்தியார் என்ருல், ஒரு மனிதரல்ல; ஒரு சாஸ்திர புத்தகம். இதை நீ முதலாவதாகத் தெரிந்துகொள். சிவஞான சித்தியார் என்பது ஓர் அரிய சைவ சித்தாந்த சாஸ்திரம்."

"இப்போது சித்தியாருக்கு என்ன வந்தது?" என்று நான் பொறுமையிழந்தவனுய்க் கேட்டேன்.

"சற்று அமைதியாகப் பொறுமையோடுகேள். இந்தச் சித்தியார் என்ற சாஸ்திரம் கி. பி. 13-ம் நூற்ருண்டில் தோன்றியது. இதன் ஆசிரியர்............ சரிபெயரையெல்லாம் சொல்லி உன்னைத் திணற அடிக்க நான் விரும்பவில்லை. இந்தப் புத்தகத்தின் முதற்பாகத்திலே, இவ்வாசிரியர் தமது சமயக் கொள்கையே மேலென்று நிலைநாட்டுவதற்காக ஒரு தந்திரம் செய்கிருர். மற்றெல்லாமதத்தினரையும் கூப்பிட்டு அவர்கள் வாதத்தைக் கேட்கிருர். அவர்கள் சொல்லி வரும்போது, ஒவ்வொருவர் சொல்வதிலும் ஏதாவது குற்றங் குறைகளைக் கண்டு, அதைச் சுட்டிக்காட்டுகிருர். 'உன் சமயம் இன்ன இன்ன வகையிலே குறைபாடுடையது' என்று சொல்லிக் கண்டிக்கிருர். இப்படி இவரால் கண்டிக்கப்பட்டவர்களுள் வாம தந்திரி என்பவன் ஒருவன். இவன் வாமதந்திரம் என்றழைேர் தருக்கமுறையைப் பின்பற்றுபவன். இவன் வந்து வாதம் செய்கிருன். செய்யும்போது தவருகச் சில கருத்துக்களை வெளியிடுகிருன். இக் கருத்துக்கள், அவனுடைய சமயக்கொள்கைக்கு முரணுகவும் இவருடைய கொள்கைக்கு ஒத்தவையாகவும் இருக்கின்றன. இக் கொள்கைகளையும் கருத்துக்களையும் இங்கே சொல்லி உன்னைத் திண்டாட வைக்கமாட்டேன்; ஏனென்ருல், நீ அவற்றைப் புரிந்து கொள்வதும் கடினம். மேலே நடந்ததைச் சொல்லுகிறேன். வாம தந்திரி கூறிய வாதத்தைக் கேட்டபோது நமதாசிரியர் சிரித்தார். அச்சமயம் அவர் கூறிய வார்த்தைகளை மட்டும் இங்கே உனக்குச் சொல்லுகிறேன். நீயே அவற்றிலிருந்து முடிவு செய்துகொள்.

"அவர் சொன்னர்: 'அப்பா, வாம தந்திரி! நன்ருய்த்தான் இந்த உலகில் நீ வாழ்ந்து கடைத்தேறுவாய், போ. வெகு நன்ருக வாதஞ் செய்கிருய். நல்லது, நீதான் எனக்கு உற்ற தோழன். ஏனென்ருல், என்னை எதிர்த்துப் பேசுகிறேனென்று வந்து எனக்குச் சாதகமாகவே பேசுருகியல்லவா? எங்கே இப்படி உன் வலக்கையைக்கொடு பார்க்கலாம் பிடித்துக் குலுக்கவேண்டுமென்று எனக்கு ஆசையாயிருக்கிறது. அறிவிலே உனக்குச் சமானமானவர்கள் வேறெவரும் இல்லை' என்று சொல்லிவிட்டு, அந்த வாமதந்திரியின் கையைப் பிடித்துக் குலுக்கினர்."

"பேஷ் நன்ருயிருக்கிறது விஷயம். இதற்காதாரமான பாட்டைச் சொல்லு பார்க்கலாம்" என்று நான் குறுக்கே சொன்னேன்.

"ஆட்சேபணையில்லை. சொல்லுகிறேன் கேள்" என்று கூறி, நண்பர் பாதிவிருத்தமொன்றைப் பாடினர்:

> வாழவே வல்லை, வாமி!
> வலக்கைதா, என்னுயிர்க்குத்
> தோழன்நீ, உன்னை ஒப்பார்
> சொல்லிடின் இல்லை, கண்டாய்!

என்று பாடிவிட்டு, மேலும் பேசலானர்: "கை குலுக்குவது நம்நாட்டுப் பழைய வழக்கமென்று நான் எவ்வளவு சொல்லியும் நீ நம்பமாட்டேனென்கிருய். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னேயும் இப் பழக்கமிருந்தது என்று சொல்லி, புறநானூற்றுப் பாடலை மேற்கோள் காட்டினல், அது போதாது, வேறு காட்டுஎன்ருய். இந்தச் சித்தியார் திருவிருத்தத்துக்கு என்ன சொல்லுகிருய்? இதிலே ஒரு விஷயத்தை கவனிக்கவேண்டும். இதன் ஆசிரியர் ஒரு துறவி, எல்லாத்தளைகளையும் அறுத்தவர், புலன்களை வென்றவர், கேலி, சிரிப்பு முதலியவற்றுக்குச் சிறிதும் இடங்கொடுப்பவரல்ல. இத்தகைய துறவியே வாம தந்திரியின் வாதத்தைக்

[தொடர்ச்சி 88-ம் பக்கம் பார்க்கவும்]

வாஸ்தவம் எது?

கி. சந்திரசேகரன் எம். ஏ. பி. எல்.,

"நீங்க பாட்டுக்கு வாயை மூடிண்டிருந்தா எல்லாம் தானாக சரியா நடந்துடுமோ?" என்று செல்லம்மாள் தன் கணவரைப் பார்த்துக் கோபத்துடன் சொன்னாள்.

அவரிடமிருந்து பதிலே இல்லை. சாய்வு நாற்காலி யொன்றில் படுத்தபடியே அவர் அன்று காலை 'ஹிந்து'வைப் பார்த்துக்கொண்டிருந்தார்.

"காதுகேக்கலையா? எல்லோரும் போன பிற்பாடு நீங்களும் நானுந்தான் இங்கே பாக்கி. ஒண்ணும் செய்யாமே உக்காந்திருக்கேளே" என்று மறுபடியும் அவள் புருஷனருகில் வந்து கேட்கவே, அவர் முகத்தைமட்டும் நிமிர்த்தி, கவலைக்குறியுடன் வைத்துக்கொண்டார்.

அவருக்குத்தான் என்ன செய்வதென்று தெரியவில்லையே! இரண்டு மாதங்களாக ஊரில் இதே பேச்சுத்தான் எங்கும். குண்டு விழுந்துவிடும் என்று பயப்படாதவர்களே கிடையாது. சிலர் ஜப்பான் யுத்தம் செய்யத்தொடங்கியது முதல், சென்னைக்கு எதிரிகளின் கப்பல்களும் ஆகாய விமானங்களும் வந்துவிடுமென்று பயப்பட்டார்கள். உடனே தங்கள் பெண்டாட்டி குழந்தைகளை, பந்துக்களிடம் அனுப்பத்தக்க ஏற்பாடுகளைச் செய்துவந்தார்கள். ஒண்ணுவிட்ட சித்தப்பாவோ, அல்லது அத்தைமகனோ, அல்லது பாட்டியின் இரண்டுவிட்ட சித்தியோ, யாரோ ஒருவர் தெற்கேயுள்ள கிராமங்களிலிருந்தால் அவர்களை நன்றாக ஞாபகப்படுத்திக்கொண்டு குசலப்பிரச்னங்கள்செய்து, தங்கள் குடும்பங்களைக் கொஞ்சகாலம் அவர்கள் வசம் அனுப்புவதாகவும் எழுதியிருந்தார்கள். பலர் உடனேயே ஊருக்கு அனுப்பியும் விட்டார்கள் தங்களைச் சேர்ந்த பெண்டு பிள்ளைகளை. மற்றும் சிலர் கொஞ்சம் கையில் பணமிருந்தால் தனி ஜாகையை கும்பகோணம், தஞ்சாவூர், திருச்சி போன்ற இடங்களில் ஏற்படுத்தியிருந்தார்கள். இவையெல்லாம் லக்ஷ்மீநாராயணய்யர் காதிலும் விழாமலில்லை.

ஆனால் காதில் விழுவதோடு நின்றன. அவருக்கு சுபாவத்தில் எதையும் வேகத்துடன் செய்யும் மனப்பாங்கே கிடையாது. வேகமாகச் செய்பவர்களைக் கண்டாலும் அவருக்குப்பிடிப்பதில்லை. வெகு நாட்கள் பழக்கமான சோம்பலைத் திடீரென்று விடுவதும் அவருக்குப் பிடிக்கவில்லைபோலும்.

"உங்களைத்தான்—எத்தனைதரம் சொல்ரது. எதிராளாத்தில் நேத்திராத்திரி எல்லோரும் கோயமுத்தூருக்குப் போய் விட்டார்கள் தெரியுமோன்னோ! நீங்க மட்டும் ஏன் பேசாமல் இங்கேவீட்டைவிட்டு நகர உத்தேசமில்லாமலிருக்கிறீர்கள்? இந்த வீடு என்ன உங்களுக்கு சர்வமான்யமாய் விடப்பட்டதா? எதுக்கு இங்கே நாம மட்டும் சாகணும்? உங்க யோஜனையைத் தான் எனக்கும் சொல்லுங்களேன். தானாக மனத்தில் குழம்புவானேன்?" என்று செல்லம் விடாமல் சரமாறியாய் பொழியவே, பாவம், அவரும் பதிலுக்கு, 'உம்' என்று சொன்னார்.

"என்ன உம்! இந்த எழவு வீட்டை விட்டு விட்டுத் தொலையணும். இல்லாவிட்டால், இப்படியா ஒரு புருஷன் ஒண்ணும் செய்ய வகையில்லாமல் இடிஞ்சுகிடப்பார்" என்று அவள் அடக்க முடியாத ஆத்திரத்துடன் இறைந்தாள்.

இதனிடையில் 'அம்மா, இன்னிக்கு என்னமோ ஜப்பான்காரன் வரப்போரா


AMRUTANJAN
எல்லா
நோவுகளையும்
தீர்க்கும்
அமிர்தாஞ்சனம்
உத்தமம்
பாரத மணி.

உங்களுடைய
தொண்டை
சுவாசக்குழாய்களை
காப்பாற்றுவதற்கு
ஸிரோலின்
இருமலையும்
ஜலதோஷத்தையும்
ஒழிக்கிறது
ரோச் உபயோகியுங்கள்
ஸிரோலின் ஒரு பாட்டில் விலை ரூ. 3-12-0

ணுமே. தெரியுமா அம்மா! ரோட்டுலே நான் வரப்போ, ஒரு மோட்டார்வண்டி மேல் பெரிய குழாயை வைத்துக் கொண்டு யாரோ ஒரு வெள்ளைக்காரன் சொல்லிக்கொண்டு போறாம்மா. ஒரே கூட்டமாயிருக்கு மூலையில்' என்று குழந்தை சுந்திரம் உள்ளே ஓடிவந்து சொன்னான்.

'உங்கப்பாட்டே சொல்லு' என்று செல்லம்மாள் சீறினள்.

பையனும் அவ்விருவர் முகங்களையும் பார்த்துவிட்டு, அப்பா வாயை மூடிக் கொண்டிருப்பதைக் கண்டு 'ஆமாம் அப்பா!' என்று ஆரம்பிப்பதற்குள், அவர்,

'சரிதாண்டா, போ!' என்று அதட்டினர். பையன் மறுபடியும் தான் கண்டதையும் கேட்டதையும் சொல்லுமுன், வாசலில் ஒலி பறப்பிக் குழாயின் ஓசை கெட்டியாக கேட்டது. பின்வருமாறு தமிழிலும் ஒரு குரல் சொல்லியது:—

"பட்டணத்து ஜனங்களுக்கு இது எச்சரிக்கை. வேலையில்லாதவர்கள் உடனே பட்டணத்தைவிட்டு வெளி ஏற வேண்டியதுதான் கடமை; முக்கியமான தொழில்களில் வேலைபார்ப்பவர்கள் மட்டும் தங்கினல்போதும். மற்றவர்கள் ஊரைவிட்டுப் போவதற்குத் தகுந்த ரயில் வசதிகளும் அதிகாரிகளால் ஏற்பாடாகி இருக்கின்றன."

லக்ஷ்மீநாராயணய்யர் மெதுவாக நாற்காலியை விட்டெழுந்தார். எச்சரிக்கையை உரைத்துக்கொண்டே அந்த மோட்டார் வண்டியும் அவர் வீட்டு வாசலைத் தாண்டிச் சென்றது. அவர் மனைவியின் முகத்தில் மிகுந்த கலவரம் தெரிந்தது. இன்னும் என்னவெல்லாம் கலவரம் ஏற்படுமோஎன்ற பாவனையாக அவள் கணவரும் அவளைத்தாண்டிக் கொண்டு தன்னறையை அடைந்தார். பின் சென்றவள், அவருடைய அறையில் அவர், மேஜையினருகில் போடப்பட்டிருந்த நாற்காலியில் அமர்ந்து ஏதோ யோஜனையிலிருப்பதைக் காணவும், சற்று நிதானப்படுத்திக் கொண்டு, 'போரது இனிமேல் கிளம்பிவிடுவார்' என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டு தன்னைத் தேற்றியவளாய், தன் காரியத்தைச் செய்யப் புறப்பட்டாள்.

லக்ஷ்மீநாராயணய்யர் வசித்தது மாம்பலம். அவர் உத்தியோகத்திலிருந்து ரிடையர் ஆகி மாதங்கள் பத்துக்கூட ஆகவில்லை. அதற்குள் ஊரில் அவ்வளவு கடுபடி என்ருல், அவருக்குத்தான் நிம்மதி எங்கிருந்து வரும்? அவருக்கு ஒரு பெண் குழந்தை உண்டு. அவளும் சுந்திரத்திற்குப் பதின்மூன்று வருஷங்களுக்கு முன்னமேயே பிறந்தவள். அவளுக்கு வெகுநாட்களுக்கு முன்னமேயே கல்யாணமாகிப் புருஷனுடன் குடித்தனமாகச் சேலத்தில் வசித்துவந்தாள். அவளைப்பற்றிய கவலை எதுவும் அவருக்கு இருந்ததாகத் தெரியவில்லை. சுந்திரத்தின் வயது பத்து. அவன் அம்மா செல்லம்தான். அவருக்குக் குழந்தைகள் என்ருல் எல்லாம் ஒரே பிடுங்கலாகப்பட்டது. உலக வாழ்க்கையைத் தான் சரியாக நடத்தியபின் சின்னங்களாக மட்டுமே குழந்தைகளை மதித்திருந்தார் போலும். ஏனென்ருல் மற்றப்படி தனக்குப் பிள்ளை ஒருவன் இருப்பதாகவே நினைப்புக்கிடையாது; அவராகப்பிள்ளையை'வாசித்தாயா' என்று கேட்டதாகவே கிடையாது. யாராவது 'பிள்ளையாண்டான் என்னவாசிக்கிருன்? ஸெகண்டுபாரமா?', என்ருல், ஒரு வித அசட்டுச் சிரிப்புச் சிரித்துவிட்டு, ஏதோ சின்ன கிளாஸ் படிப்பைப்பற்றி விசாரிப்பதுகூட அவசியமில்லை என்று அவர் நினைத்தாரோ என்று பிறரை எண்ணும்படிச் செய்துகொண்டு சும்மாயிருந்துவிடுவார். கேள்வி கேட்டவர்கள் கோர்ட்டில் விசாரணை செய்பவர்களா? தங்கள் கேழ்விக்குப் பதில் சரியானபடி இல்லையே என்ற கவலை அவர்களிடமும் இல்லை. அவர்கள் பேசவந்த காரியத்தில் குறியாய் இருந்து விட்டுச் சென்றுவிடுவார்கள்.

யுத்தம் சென்னைக்குச் சமீபம் வருவதைக் கேட்டதிலிருந்து வாஸ்தவத்தில் லக்ஷ்மிநாராயணய்யருடைய நிதானமெல்லாம் பறந்து விட்டது. நிஜத்தில் தைரியம்இல்லாதவர்தான் அவரும் ஆனாலும் அதிகம் தானாகப் பேசமாட்டார் ஒன்றையும் பற்றி. தன் மனத்தின் எண்ணங்களை வெளிக்காட்டிக்கொள்ளாமல் பிறரை மட்டும் தொந்திரவு செய்பவர் தான் அவரும். குண்டு விழுவதைப் பற்றிப் பேசுவதுகூட அவருக்கு ஒரு விதத்தில் பயம். எதையாவது பயங்கரமாய் கேட்கநேர்ந்தால் தன் இதயத்திற்குத் திங்குநேரிடும் என்ற கவலை ஒரு பக்கம் அவருக்கு அதிகம். மொத்தத்தில் இப்பெரிய உலக யுத்தம் தன்னை தொந்திரவுக்குள்ளாக்கியதாகவே அவர் நினைப்பு. தீர ஒருவிஷயத்தை விசாரித்தால் நிஜம் தெரியலாம்; தெரிந்தால் ஒருகால் சிரமப்படுத்தக்கூடும் மனத்தை அது என்பதும் அவருடைய கக்ஷி. மொத்தத்தில் தான் நடந்து கொள்வது முறை என்றும், மற்றவர்கள் சதா எல்லா விஷயங்களையும் பேசிப்பேசி அலுக்கவைப்பதாகவும் கருதுவது அவர் வழக்கமாகிவிட்டது.

கும்பகோணத்தில் தனி ஜாகை ஒன்று வைக்க இரண்டொரு சிநேகிதர்களுக்கும் ஏற்கெனவே எழுதியிருந்தார். இன்று நிச்சயம் லெட்டர் எழுதி ஏர்ப்பாடுகள் செய்துவிடுவார் என்ற எண்ணமே செல்லம்மாளைச் சற்றுமனநிம்மதியைப் பெற செய்தது. ஆனால் ஸ்நானம் செய்ய அவருக்கு வழக்கம் போல் மணி பதினொன்று ஆகியது. அதன் பிறகு ராமாயண பாராயணம்வேறு எதோக்தமாக நடைபெற்றதைக் காணவும், செல்லம்மாளுக்கு வந்துவிட்டது மனக்கசப்பு. "சமயம் பொழுது கிடையாதா! இந்த பேச்சுக்கும், ராமாயணபாராயணத்துக்கும்! எல்லோரும் என்னென்னமோ வெளியிலிருந்து வந்ததும் வீட்டிலே சொல்றா. நீங்க ஒண்ணையும் சொல்லக் காணோம். ஊர்லே இவ்வளவு குழப்பமாயிருக்கு. அப்போகூட என்னிடம் கலந்து ஒருபேச்சைக் காணோம்! என்பாவம் தான்." என்று அவர் எதிரே நின்று நொந்து கொண்டாள். அவரும்வழக்கமாய் பேசாதவர், இன்று தன் ராமாயணத்தை அவள் ஏளனமாய் பேசியதும் ஒரு மாதிரி மனம் தவித்து விட்டார் போலும்.

"ஆமாம், எது என்னவானாலும் நான் ராமாயண பாராயணமில்லாமல் சாப்பிடமாட்டேன். குண்டு விழட்டும், விழாது போகட்டும் நான் ராமாயணம் வாசிப்பது என்னவோ நிச்சயம்" என்று குரல்சற்று வேகத்தினால் நடுங்க, உஷ்ணமாக பதில் சொன்னார்.

அன்று சம்பாஷணை அவ்வளவு தான். செல்லம்மாளுக்கு மனதில் வருத்தமும் ஆத்திரமும் பொங்கியது. ஒருகாரியம் ஒழுங்காகச் செய்யத்தெரியாத புருஷனுக்கு ராமாயண பாராயணம் ஒருகேடு என்றுதான் அவள் உள்ளம் குமுறியது. தன் காரியங்களைக் கவனிக்கவே அவளுக்குப் பொழுது இல்லாததால், சரி, எது எப்படியாகிலும் போகட்டும், என்று வைராக்கியத்துடன் தன் சாமான்களையும், குழந்தை சுந்திரத்தின் துணிமணி நோட்டுப் புத்தகங்களையும் பெட்டியில் அடுக்கிவைத்துத் தயார்செய்துகொண்டாள். இதற்குள் ரெயில் பிரயாணம் செய்யவேண்டிய நிபந்தனையும் ஏற்பட்டது. அதிகாரிகள் ஊரைவிட்டு எல்லோரையும் கொண்டுபோய் வெளியில்விட ஏற்பாடுகள் செய்திருந்தார்கள். லக்ஷ்மீ நாராயணய்யருக்கு மனதினுள் இருந்த அதிக கலவரத்தில் இன்னசெய்வதென்று தெரியவில்லை. முன்னும்பின்னுமாக வீட்டில் உலாவினார். பீரோவைத் திறந்து பார்த்தார். என்றைக்கோ தட்டுகளில் அடைத்து வைத்த துணிமணிகளைக் காணவும், அவைகளைக் கவனித்து வேண்டியது எவை என்று தீர்மானிப்பதே அவருக்குச் சிரமமாகிவிட்டது. காலையிலிருந்து துணிகளைப் பார்வையிடுவதில் முழுநேரத்தையும் செலவழித்தார். அன்று இரவு வேறு ரெயில் பிரயாணம் செய்யவேண்டும். கிழிந்த துணிகளை மடித்து மடித்துப் பெ

ட்டியில் பத்திரப்படுத்திக்கொண்டார். தன் சாமான்களை ஒன்றையும் பட்டணத்தில் விட்டுச்செல்ல அவருக்கு இஷ்டம் கிடையாது. அதுதான் காரணம் கிழிந்துபோன துணியையும் விடாமல் எடுத்து வைத்ததற்கு.

ஆனால் நாழிகை ஆக ஆக அவருக்குத் தன் மனைவியின்மேல் தான் புகார் சொல்லத்தோன்றியது. அவள் ஒரு ஆப்பைக் காம்பையும் விடாது மூட்டை கட்டினதாக அவருக்குப்பட்டது. அவள் ஒருவாரமாகச் சாமான்களைக் கவனித்து வேண்டியவை எவை வேண்டாதவை எவை என்று தீர்மானித்துப் பொறுக்கி வைத்திருந்தாள். லக்ஷ்மீ நாராயண அய்யரும் அதிகாரதோரணையாக மனைவியைப் பார்த்து; "நாழிகையாகிறது, நீ எதையோ, ஆப்பைக் கூட்டைக்கூட விடாமல் மூட்டை கட்டறயே. கும்பகோணத்தில் ஆப்படாதா அது" என்று தடபுடல் படுத்தினார்.

பாவம், செல்லம்மாள் மனதிலும் ஒரே வேதனை. இத்தனை நாட்களாக இருந்த ஊரையும் வீட்டையும் விட்டுச் செல்ல யாருக்குத்தான் மனம் வரும்? மேலும் வீடு, திரும்பி வந்ததும், பார்க்கும் ஸ்திதியிலிருக்கப் போகிறதா, என்னவோ என்றெல்லாம் நினைத்து அவள் உள்ளம் உருகியது. ஆனால் அவள் தன் வேலையையும், செய்யவேண்டியவைகளையும் ஒன்றுகூட மறக்கவில்லை. விஷயங்களைக் கவனித்துப் பழக்கமானது அவள் புத்தி; திகைப்பைக் காட்டாது ஒருபொழுதும்.

அன்று இரவு ரெயிலில் கூட்டத்துடன் கூட்டமாகத் தம்பதிகள் குழந்தை சுந்திரத்துடன் ஏறிக் கும்பகோணம் வந்தடைந்தார்கள். கீழ டபீர்தெருவில் ஒரு வீட்டை ஏற்படுத்தியிருந்தார்கள் லக்ஷ்மிநாராயணய்யருக்காகச் சில சிநேகிதர்கள். காப்பி அருந்திவிட்டு லக்ஷ்மீ நாராயணய்யரும் தன் நண்பர்கள் தன்னிடம் காட்டிய மரியாதையை மிகவும் மனதில் அநுபவித்தார். பிறகு மணி பதினொன்று அடிக்கவும் கிணற்று ஜலத்தில் ஸ்நானம் செய்துவிட்டு, மடி வேஷ்டியைப் பஞ்சகச்சமாகக் கட்டிக் கொண்டார். தனக்காக மனைவி போட்டிருந்த பலகையில் வந்து உட்காரவும் தான் ஞாபகம் வந்தது. தன் கலவரத்தில் ராமாயண புத்தகத்தைப் பட்டணத்திலேயே விட்டு மறந்து வந்தது. தன் பூஜை அறையில் சிக்குப் பலகையில் ராமாயண புத்தகத்தை வைத்துவிட்டு வந்தது ஞாபகத்தில் நன்றாக வந்தது. என்னசெய்வது என்று புரியவில்லை. ஒருகால் தன் மனைவி அதை பத்திரமாக எடுத்து வந்திருப்பாளோ என்ற பிரமையும் தட்டியது மனத்தில். மெதுவாக அவளிடம் அவர் "என் ராமாயணம் உன்னிடம் இருக்கோ!" என்று கேட்டார். அவ்வளவுதான் செல்லம்மாளுக்குத் தெரிந்துவிட்டது அவருடைய நிஜமான கவலை. அவள் மனத்திலும் சற்று திருப்திதான் அதில். ஆனாலும் சும்மாவிராமல் அவள்;

"ஒருநாழி பெட்டியின்பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தீர்களே. தினம் வாசிக்கும் ராமாயணம் மறந்து போயிடுத்தா? நல்ல ஞாபகம்தான்! ராமாயணத்திலுள்ள பக்தி அதைவிட ஜாஸ்தியாயிருக்கு!" என்று ஏசிக்காட்டினாள். அவரும் விட்டுக்கொடுக்காமல், 'பூஜை சாமான்களை எடுத்துவந்தாயே இதையும் எடுத்துவந்தாயோ என்றுதான் கேட்டேன். இதற்கென்ன இவ்வளவு அமர்க்களம்' என்றார். 'அமர்க்களம் ஒன்றுமில்லை. நீங்கள்தான் ராமாயணம் பாராயணம் செய்யாமல் சாப்பிடமாட்டேன் என்று அமர்க்களம் செய்தீர்கள். அப்படிப்பட்ட புத்தகத்தை ஊரிலேயே வைத்து வந்தீர்களே; ஏன்? என்று கேட்கிறேன்' என்றாள் பரிஹாஸத்துடன். ஆப்பைக்கூட்டைக் கூட மூட்டை கட்டியதை அவர் பரிஹாஸமாயும் கோபமாயும் எடுத்துச் சொன்னதை அவளால் மறக்க முடியவில்லை. அதையும் சொல்லிக்காட்டி விட்டாள். "ஆப்பைக் கூட்டை நான் நம்பியதால் அதைநான் மறக்கவில்லை. உங்களுக்கு ராமாயணத்

"அவனைப்போல புஷ்டியாக இருக்க வேண்டுமென்று நீ விரும்பவில்லையா"?

வாஸ்தவம்! பையன் எப்பொழுதும் சுறுசுறுப் பாகத் தான் இருக்கிருன். அவனுடைய சக்தி குறையாமல் இருப் பதற்கு வேண்டி ஆகாரத்தைக் கொடுக்கவும், குறைந்து போன சக்தியை உடனே பெறும்படி செய்யாவிடில் குழந்தை வெகு சீக்கிரத்தில் களைப்புற்று விடுமென்றும், விடமின் கூடியதும் புஷ்டி தரக்கூடிய ஆகாராதிகளி ஞல்தான் குறைந்த சக்தியை மீண்டும் அடையலா மென் றும் அவன் தாயாருக்குத் தெரியும். இங்குதான் விடமின் சேர்ந்த டால்டா அதிக உபயோகமா யிருக்கிறது. அது ஆகாரத்திற்கு புஷ்டியையும் விடமினும் அளித்து சக்தியுண்டாக்கச் செய்கிறது.

விடமின் சேர்ந்த டால்டா சரீரத்தை திடகாத் திரமாக வளரச் செய்யவும், குறைந்த பலத்தை ஈடு செய்யவும் உதவுகிறது . . . விடமினுடன் சேர்ந்த டால்டா ஓர் சிறந்த ஆகார வஸ்து. அது சக்தி யைத் தரத்தக்கது. உணவுகளை டால்டாவினுல் தயார் செய்தால் ஆகாரத்திற்கு அதிக சக்தி கிடைக்கிறது.

விடமின் சேர்ந்த டால்டா தாவர எண்ணையால் தயார் செய்யப் பட்டதென்று உத்திரவாத முள்ளது —சீல் செய்த டின்களில் விற்கப்படுகிறது

HVM. 19-18 TM　　THE HINDUSTAN VANASPATI MANUFACTURING CO., LTD., BOMBAY

தின் உபயோகத்தில் சரியானநம்பிக்கை இருந்திருந்தால் இப்படி அதை மறப்பீர்களா?" என்றாள்.

"தினம் விடாமல் பாராயணம் செய்யும் ராமாயண புத்தகத்தை ஏன் மறந்தோம்" என்று லக்ஷ்மீநாராயணய்யருக்கு யோஜிக்க யோஜிக்கப் புரியவில்லை.

ஜப்பான்காரன் வருகிறான் என்ற பயம் தான் அதற்குக் காரணம் என்று அவர் கடைசியில் தீர்மானித்தார். ஆனால் செல்லம்மாள் நினைத்தது, சரியானபக்தி அவருக்கு ராமாயணத்தில் இல்லாத காரணம்தான் அதை மறக்க வைத்ததென்பதே.

வாஸ்தவம் எது ?

[81-ம் பக்கத் தொடர்ச்சி]

கேட்டுத் தமக்குவந்த சிரிப்பை யடக்க முடியாமல், 'அப்பா, வாம தந்திரி! உன் வலதுகையைக் கொஞ்சம் இப்படித்தா, ஒரு குலுக்கு குலுக்கவேண்டும் போல் இருக்கிறது எனக்கு' என்று சொல்வாரானால், இந்தக் கைகுலுக்குகிற பழக்கம் எவ்வளவு சாமானியமானது, நம் மக்களிடையே எவ்வளவு இயல்பாக வழங்கியது என்பதை நாம் எளிதில் உணராமல்லவா? இதற்கென்ன சொல்லுகிறாய்? இன்னமும் உனக்கு நம்பிக்கை பிறக்கவில்லையா?" என்று நண்பர் வெற்றிக்குரிய பெருமிதந்தோன்ற என்னைக்கேட்டார்

நான் என்னசொல்ல இருக்கிறது! அவர் கொண்ட முடிவை எதிர்த்து நான் ஏதாவது சொல்லி, கடைசியிலே என்னைப்பார்த்து அவர், 'வலக்கைதா, என்னுயிர்க்குத் தோழன் நீ, உன்னை ஒப்பார் இல்லை கண்டாய்' என்று சொல்ல நேர்ந்துவிட்டால்—?



வேண்டுமென்றே
உங்களை
அவர்கள்
குறிபார்க்கவில்லை



ஆனால் அவதிப்படும் துர்பாக்கியசாலிகளில் ஒருவராக நீங்கள் ஆகலாம். தலைவிதி அப்படி இருந்தால், நீங்கள் அந்தக் கொடுமைக்கு ஆளாவதிலிருந்து தப்ப முடியாது! ஆனால் நீங்கள் **இன்ஷூரன்ஸ்** மூலம் உங்கள் குடும்பத்தை காப்பாற்றிவிட முடியும்.

விவரங்களுக்கு எழுதுக:

நேஷனல் இன்ஷூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்,

7, கௌன்ஸில் ஹௌஸ் தெரு, கல்கத்தா.

மதராஸ் பிராஞ்சு: **362, சைனா பஜார் ரோடு, சென்னை.**

(72-ம் பக்கத் தொடர்ச்சி)

அநுபவித்தான் என்றால் நம்பமாட்டோம். புத்தர் தன் அழகிய மனைவியையும் மகனையும் அரசையும் உலகத்தின் உண்மையைக் கண்டுபிடிக்கத் துறந்தார் என்றால் நம்பிக்கைவராது. ஏசு பிறருடைய பாபங்களை நீக்கத் தன் உயிரை அர்ப்பணம் செய்தார் என்றால் நாம் நம்பமாட்டோம்.

உலகத்தையோ அரசையோ காதலிக்காகத் துறக்கப்பட்டவர்களும் உண்டு. தர்மத்திற்காகவும் உலகத்திற்காகவும் காதலியையும்கூடத் துறக்கப்பட்டவர்களும் உண்டு. இக்காலத்தில்கூட தியாகத்தின் தன்மையை மகாத்மாகாந்தியும் ராஜகோபாலாசாரியாருமே மலைமேல் வைத்த விளக்கைப்போல் காட்டவில்லையா?

நான் அவரை வால்மீகி இயற்றியதை மறுக்காமல் மூடபக்தியாக ஒப்புக்கொண்டே தீரவேண்டும், என்றுரைக்கவில்லை. அவரை வால்மீகியின் உள்ளுணர்ச்சியை அறிந்துகொள்ள மறுபடியும் முயற்சி செய்யும்படி மிகவும் தாழ்மையுடன் வேண்டிக்கொள்ளுகிறேன். அவர் அயோத்தியாவாசிகள் நல்லவர்களாயிற்றே, அப்படி வம்பு பேசுவார்களா? என்று கேட்கிறார். அவர்கள்கற்பை அதிகமாகப்பாராட்டினதால்தான் அப்படிச்சொல்லியிருக்கலாம். அவர்கள் என்ன சொன்னார்கள்; "ராவணன் பலாத்காரமாகக் கொண்டுபோய் தன் வீட்டில் வைத்திருந்தவளை ராமர் ஏன் ஏற்றுக்கொண்டார். நாமும் ஏன் மனைவி எதைச் செய்தாலும் சரி என்று இருக்கக்கூடாது." (சர்க்கம் 43) யாரோ ஒரு வண்ணான் சொன்னான் என்பது தவறு. ஜனங்கள் மொத்தமாக தர்மருசியிலிருந்து வழுவிப் போவார்களோ என்று ராமர் பயந்தார்.

ராஜகோபாலாசாரியார் கூறியுள்ள இன்னும் ஒன்றிரண்டு விஷயங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். ராமாயணத்தின் கதை முழுவதையும் முதல் அத்யாயத்தில் சுருக்கமாகச் சொல்லுமிடத்தில் "இந்த அனர்த்த விஷயம்" சொல்லப்படவில்லை என்பது அவர் வாதங்களில் ஒன்று. ஆனால் இந்தவிஷயத்தைத் தீர ஆலோசித்தால் உண்மை புலப்படும். இதை என்னுடைய விரிவான நூலில் விளக்கியிருக்கிறேன். நாரதர் உபதேசித்தது ராமர் பட்டாபிஷேகம் செய்துகொண்டு ஆளும் காலம் வரையில்தான். அதில் சிதையின் தியாகம் எப்படிக் காணமுடியும்? வால்மீகி உத்தரகாண்டம் எழுதிய பிறகு வேறு ஒரு அட்டவணை பாலகாண்டம் மூன்றாவது அத்யாயத்தில் கூறி இருக்கிறார். அதில் **स्वराष्ट्र रंजनं चैव वैदेह्या च विसर्जनं** என்று உரைக்கப்பட்டிருக்கின்றது.

ராஜகோபாலாசாரியார் பின்னும் கூறுகின்றார்: "பாமரஜனங்கள் கூடச் சீதையைக் காட்டுக்கனுப்பச் சொல்லவில்லையே; ஏன் ஒரு விசாரணையுமின்றி அக்கிரமமாக ராமன் செய்யத் துணிந்தான்? இதை எவ்விதத்திலும் ஒப்புக்கொள்ளமுடியாது. இதனால்தான் நன்னெறி பயில்வதற்கு இந்தக்கதை உதவாது என்று நம்முடைய பெரியோர்கள் இந்தக் கட்டத்தைப் பிரயோகத்திலின்று தள்ளிவிட்டார்கள். ஆழ்வார்களும் இதை எடுத்துப் பாடாமல் நீக்கிவிட்டார்கள்" ஜனங்கள் ராமரிடம் சீதையைக் காட்டுக்கு அனுப்பச் சொல்ல முடியுமா? என்ன விசாரணை ராமர் செய்யமுடியும்? அவர்தான் சிதை தூயவள் என்று நன்றாக அறிந்திருந்தாரே. ஜனங்களுக்கு தர்மத்தில் பிடிப்புவிட்டு உயர் நிலையிலிருந்து (High standards) நழுவிப்போய் தர்மம் குன்றிப் போகுமோ என்றுதான் ராமர் பயந்தது. அந்தக் கட்டத்தை எந்தப் பெரியோர்கள் தள்ளினார்கள்! காளிதாஸன் முதலியவர்கள் அதை எடுத்தும் கொண்டிருக்கிறார்கள். ஆழ்வார்கள் பாடாவிட்டால் என்ன: ராமசரிதத்தில் சில கதைகளை மட்டும் அவர்கள் பாடி

ஞர்கள். தியாகய்யர் பாடாவிட்டால் பாடாத அம்சங்களைக் தள்ளிவிடுவதா?

பிறகும் அவர் கூறுவது : "ராமனைப் போன்ற ஒரு தீரன் அவ்வாறு செய்திருக்க மாட்டான் என்று நன்கு உணர்ந்தும், சோகரஸத்தில் மனிதர்களுக்குள்ள பிரியத்தினால் இந்தக்கட்டத்தைப் படித்தும் கேட்டும் வருகிறார்கள்." பொதுஜனங்கள் அப்படிப்பாமரர்களல்ல. அவர் கூறுவது:"ஒருகொலைக்கதையையும் திருடன் சரித்திரத்தையுங்கூட அழகும் ரஸமும்கொண்டு விளங்கும்படிச் செய்யலாம். அவ்வாறே இதுவும்". அப்படிச் செய்து பார்க்கலாமே. ஒருக்காலும் செவி சாய்த்துக் கேட்கமாட்டார்கள். அது உண்மையானால் ராவணன் கதையைக்கேட்டு ஆனந்தித்து எழுந்து போய் விடலாமே.

மீண்டும் ராஜகோபாலாசாரியார், அவருக்கு சீதையிடத்திலுள்ளஉண்மையான உள்ளன்பினால் "ராவணனைவிட ராமனைத் தாழ்வாகக் கூறுகின்றார். ஊர்வம்புக்குப் பயந்து ராமன் சீதையைக் காட்டுக்கு அனுப்பியது ராவணன் செய்த செயலை விடப் பெரும் பாவச்செயல்....காமவெறி கொண்டவனானும், தேவியைப் பலாத்காரம் செய்ய அவன் எண்ணங் கொள்ளவில்லை. அசோக வனத்தில் வைத்து அவள் அன்பைப் பெற முயன்று பலநாட்கள் தன் வெறியை அடக்கியே வந்தான். அதற்காக உயிரையும் நீத்தான். ஆனால் இந்த உத்தரராம சரித்திரம் வெறும் ஊர் வம்பைக் கேட்டு ராமன் சீதையை **நீதி, உண்மை, எதையும்** கருதாமல் காட்டுக்கு அனுப்பிவிட்டான் என்று சொல்லுகிறது". ராவணன் உத்தமன் சிவபக்தன் என்று ஒரு சாரார் உரைக்கும் புகழுரையை நான் கேட்டு ஆச்சரியப்பட்டிருக்கின்றேன். அவன் பலாத்காரம் செய்ததற்குக் காரணம் பல உள. அவையெல்லாம் வேறு நூலில் குறித்திருக்கிறேன். சாபங்களை மூட்டையாகக் கட்டி வைத்திருந்தான். கற்பு தேவதையாகிய சீதையிடத்திலும் பயம். வாலியைக் கொன்ற ராமனிடத்திலும் பயம். இவையெல்லாம் காமத்தை மடக்கி அடக்கின. ராமன் தீரோதாத்த நாயகன். தர்ம சுரூபி. பரமாத்மாவின் அவதாரம். உலகத்திற்கு தர்ம வழியைக் காட்ட அவதரித்த கடவுள். அவருடைய தத்துவத்தை நாம் நன்கு ஆராய்ச்சி செய்து உணரவேணும். அது நம்முடைய முக்கியக்கடமையாகும். ஆகையால் எதை ராஜகோபாலாச்சாரியார் "கொடூரக்கதை, அவலக்ஷண புராணம்" என்று கூறுகின்றாரோ அது பற்றி அந்த வசை மொழிகளுக்கு இடமே இல்லை. "உண்மையில் இந்தக் கதையைச் சகிக்க என்னால் முடியவில்லை" என்று அவர் கூறுகிறார். அவர் வால்மீகியின் தத்துவ திருஷ்டியுடன் கண்டால் சகிக்கவும் சகிப்பார். போற்றவும் போற்றுவார். மகரிஷிவர்ணிக்கும் ராமன் யார்?

नवनं गन्तुकामस्य त्यजतश्च वसुन्धरां ।
सर्वलोकातिगस्येव लक्ष्यते चित्तविक्रिया ॥

(அயோத்தியா காண்டம்)
ஸர்க்கம் 19, சுலோகம் 13

உத்தரராம சரித்திரத்தின் நீதி என்ன? ராஜகோபாலாச்சாரியார் "ஊர் வம்பை எதிர்த்துப் போராடவேண்டும்" என்பது தான் பொருள் என்று கூறுகின்றார். ஊர் வம்பைத் திருத்தவேண்டியதுதான். ஆனால் உத்தரராம சரித்திரத்தின் முக்கிய நீதி, தர்மம் ஓங்கிவளரவேணும். அதற்குக் குறைவு வராமலிருக்க எதையும் தியாகம் செய்யலாம். அந்தத்தியாகத்தினாலே ஒரு கேடும் வராது என்பது தான்.

I.T.L.

குழந்தைகளுக்கு
ஆரோக்யம்
அளிக்கிறது

ஏதோ ஒருவித மாறுபாட்டுடன், சிடுமூஞ்சித்தனம்பண்ணி, எவ்வித காரணமும் வெளிப்படையாக இல்லாமல், குழந்தை ஓலமிட்டழுதால், அதற்கு ஜீரண சக்திக் கோளாற்றினல் ஏற்பட்ட தாங்கொணத வலியே காரணமாக இருக்கும். அம்மாதிரி சந்தர்ப்பங்களில் கிரைப் சிரப் ஐ. டி. எல். உடனடியானசிகித்ஸை செய்வதோடு, மேற்கொண்டு விருத்தியாகக் கூடிய பெரும் இன்னல்களையும் வராமல் தடுக்கிறது. கைவசம் எப்போதும் ஒரு பாட்டிலை வைத்திருங்கள்.

கிரைப் சிரப்

கவர்மெண்ட்
இண்டஸ்டிரியல் & டெக்னிகல்
லேபாரட்டரி, மல்லேஸ்வரம், பெங்களூர்.

ஏஜண்டுகள்:- மெஸர்ஸ் பெஸ்டு அண்டு கோ., லிமிடெட்,
தபால் பெட்டி 63, மதராஸ்.

Oxford Pamphlets On Indian Affairs.

No. 1.	The Cultural Problem. By Sir S. Radhakrishnan & others	As. 8.
No. 3.	The Ecconomic Background. By K. T. Shah & others	As 8.
No. 6.	Ceylon. By H. A. J. Hulugalle	As 4.
No. 7.	Social Problem. By S. Natarajan	As. 4.
No. 8.	The Food Supply. By Radhakamal Mukerjie	As. 4.
No. 9.	The Land & its Problems. By Sir T. Vijayaraghavacharya	As. 4.
No. 10.	Industrialisation. By P. S. Lokanathan	As. 4.

(Published By Oxford University Press, Indian Branch, Madras.)

மேற்கண்ட ஏழு சிறு புத்தகங்களும் பிரபல ஆசிரியர்களைக்கொண்டு ஆங்கிலத்தில் வெகு அழகாய் எழுதி வெளியிடப்பட்டிருக்கிறது. இந்த யுத்த நெருக்கடியில் கடுமையான காகிதப்பஞ்சம் போராடி வரும் சமயத்தில் ஆக்ஸ்போர்ட் யுனிவர்ஸிடி பிரஸ் இந்தியாவின் அரசியல் பொருளாதார நாகரீக விஷயங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்துப் புத்துயிரளிக்க திட்டம்போட்டு இச்சிறு புத்தகங்களை வெளியிட முன் வந்திருப்பது மிகவும் போற்றத்தக்கது.

ஒவ்வொரு புத்தகமும் அந்தந்தத் துறையில் பிரசித்திபெற்ற பேராசிரியரைக் கொண்டு ஒரு புதுப்பார்வையுடனும் திட்டத்துடனும் எழுதப்பட்டிருக்கிறது. புத்தகத்திற்கே ஒரு திட்டம்போட்டு எழுதப்பட்டிருக்கிறது. 32 பக்கம் அல்லது 64; விலை அணா 4. அல்லது 8. ஒவ்வொரு புத்தகத்திற்கும் தலை உடல் கால் விளங்குகிறது. எளிய நடையில் ஆராய்ச்சிக் குழப்பமன்னியில் தெளிவாய் தீர்க்கமான பார்வையுடன் ஒவ்வொரு விஷயத்தையும் கடைக்தெடுத்து இந்தியாவுக்குப் புத்துயிரளிக்கும் முறையிலே எழுதப்பட்டிருக்கிறது.

சாதாரணமாய் நான் புத்தகங்களை மிக்க ஆவலுடன் படிக்கிறவனல்ல. ஆனால் இந்த ஏழு புத்தகங்களையும் விடாமல் ஆவலுடன் படித்தேன். உள்ளம் பூரிக்க, மிக்க திருப்தியுடன் ஸர் எஸ். ராதாகிருஷ்ணன், கே. டி. ஷா, பி. ஜே. தாமஸ், ஜே. ஸி. குமரப்பா, ஸர் டி. விஜயராகவாச்சாரி, எச். ஏ. ஜே. ஹூலுகாலே, ராதகமால் முகர்ஜி, டாக்டர் பி. எஸ். லோகநாதன் இவர்கள் எழுதிய அறிவுத்திட்டத்தைக் களிப்புடன் படித்தேன். நமது நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் இவைகளை வாசித்துப் பயன் பெறவேண்டும். மதிப்புரையில் விஷயத்தைச் சுருக்கிச் சொல்வதில் லாபமில்லை.

நம்பர் 3, 8, 9, 10 உள்ள புத்தகங்களில் கண்ட வழிகளை அடிப்படையாகக்கொண்டு நாம் ஓர் பொருளாதாரத்திட்டம் போட்டால் நம் நாட்டின் செல்வம் கங்குகரையில்லாமல் பெருகி நமது வாழ்வுக்கு முன்னேற்றமளிக்கும் என்பதற்கையமில்லை. இதற்குச் சாட்சி இந்த ஏழு சிறு புத்தகங்களே. இவைகளை ஹிந்தியிலும், தமிழிலும் இதர இந்திய பாஷைகளிலும் மொழிபெயர்த்து ஆயிரக்கணக்காய் நாட்டில் பரப்பவேண்டும்.

"பழய பேறு"

அரசாங்க விற்பனை மண்டி,

திருவனந்தபுரம்.

மாஸ்காட் ஹோட்டலுக்குச் சமீபமுள்ளது.

சமஸ்தான குடிசைத்தொழில் மூலம் செய்த சரக்குகளை விளம்பரம் செய்யத் தக்கதோர் ஸ்தலம்.

நல்ல குணத்திற்கும், நீண்ட உழைப்பிற்கும் பேர்பெற்ற சரக்குகள்.

ஒருமுறை விஜயம் தங்களைத் தெளிவு படுத்தும்.

பட்டு, பருத்தி முதலிய கைத்தரி சாமான்கள், தந்தம் கொம்பு வேலைகள், பூவேலைப்பாடுள்ள வெள்ளி சாமான்கள், மரசாமான்கள், களிமண் சட்டி வகையருக்கள், ரப்பர் சாமான்கள், மர விளையாட்டு சாமான்கள் முதலியன. தேங்காய்க் கொட்டாங்கச்சிகள், எருமை மாட்டுக்கொம்பு சாமான்கள், தங்கம், தங்க முலாம் பூசிய நகைகள், கயிற்றுப் பாய், வலைகள், கம்பளி, பருத்தி விரிப்புகள், பூவேலை செய்த துணிகள், தேன், சுத்தம் செய்த சர்க்கரைப்பதார்த்தங்கள் வலைப் பைகள், மற்றும் பல உயர்தர சாமான்களும்

நியாயமான விலையில் கிடைக்கும்.

டைரக்டர் ஆப் இண்டஸ்ட்ரீஸ்

திருவனந்தபுரம், திருவாங்கூர்.

மதிப்புரை.

ஸ்ரீ சங்கர பகவத்பாத பாஷ்ய ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்திரத்திற்கு ஸ்ரீ வே. நாராயணன் எம். ஏ., எம். எல்., செய்த தமிழ் அநுவாதம்: 280 பக்கங்கள்: விலை ரூபாய் 1. (ஸ்ரீ பாலசுப்ரமண்ய அய்யர் பி. ஜி. பால் அண்டு கோ. புஸ்தக வியாபாரிகள் மதராஸ்.)

புதுக்கோட்டை ஸமஸ்தானம் வித்வத் ஸபாத்யக்ஷரும் தாஞநிகாரியுமான காளி ஸ்ரீ V. சங்கார்யரவர்கள் எழுதுகிறார்:-

ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாம ஸ்தோத்திரம்—தேவநாகரி மூலமும் ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீமத் ஆதிசங்கர ஸ்ரீ பகவத்பாதாள் பாஷ்யத்திற்கு ஸ்ரீ வே. நாராயணன் எம். ஏ., எம். எல்., செய்த தமிழ் அநுவாதத்துடனும் கூடிய ப்ரதியைப் பார்த்து மிகவும் ஸந்தோஷிக்கிறேன்.

கலியின் காரணமாகவும், ப்ராசீன ஆசாரமுறைப்படிக்குள்ள அக்ஷராப்யாஸ முறைக் குறைவாலும் தற்சமயமுள்ளவர்களில் அநேகர் தாம் ஹிந்து என்பதற்கறிகுறியாக அவச்யம் அறிய வேண்டியவைகளை அறியாமல் பலவாறாக இருக்கும் இக்காலத்தில், ஸகல ச்ரேயஸ்ஸுக்கும் காரணமான இந்த விஷ்ணுஸஹஸ்ர நாமத்தை ஸ்ரீ பகவத்பாதாளின்பாஷ்ய உரையுடன் வெளியிட்டிருப்பது மெச்சத்தக்கதே. இந்த விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தின் கௌரவம், வால்மீகிமகரிஷியால் ஸ்ரீமத் ராமாயணத்தை படனம், ச்ரவணம் பண்ணுகிறவர்களுக்குப் பலன் சொல்லுங்காலத்தில் தனக்கு ஸ்ரீ நாரத மகரிஷியால் உபதேசிக்கப்பட்ட அடியிற்கண்ட

पठन् द्विजो वागृषभत्वमीयात्स्यात्क्षत्रियो भूमिपतित्वमीयात् ।
वणिग्जनः पुण्यफलत्वमीयाज्जनश्च शूद्रोपि महत्त्वमीयात् ॥

என்கிற ச்லோகத்தால் வெளியிட்டிருப்பது போல் (भारतः पञ्चमो वेदः) என்று ஐந்தாவது வேதமாகச் சொல்லப்பட்ட மஹாபாரதமத்தியில் ஸ்ரீ பீஷ்மாசார்யரால் உபதேசிக்கப்பட்ட ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தின் பலோபதேசப்ரகரணத்தில்

यदिदं श्रुणुयान्नित्यं यापि परिकीर्तयेत् ।
नाशुभं प्राप्नुयात्किञ्चित्सोमुत्रेह च मानवः ॥

என்கிற ச்லோகம் முதல்

न वासुदेव भक्तानां अशुभं विद्यते क्वचित् ।
जन्ममृत्यु जराव्याधि भयं नैवोपजायते ॥

வரையிலுள்ள ச்லோகங்களால் நன்றாய் வெளியாகிறபடியால் அதைப்பற்றி விஸ்தாரமாக எழுதவேண்டியது ஒன்றுமில்லை. ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணஞ் செய்கிறவர்களுக்கு யாதொரு பயமுமில்லை. ஸகலவிதமான க்ஷேமமும் உண்டென்பது திண்ணம். வேதங்களில் உபநிஷத்பாகம்போல் ஐந்தாவது வேதமான பாரதத்தில் விஷ்ணு ஸஹஸ்ரநாமம் விளங்கிவருகிறது. ஆகையால்தான் ஸ்ரீ ஆதி சங்கராசார்ய பகவத்பாதாள் உபநிஷத்துக்களுக்கு பாஷ்யமெழுதினது போல் இதற்கும் பாஷ்யமெழுதியுள்ளார்கள். இதற்கு முந்தி இந்த விஷ்ணுஸஹஸ்ர நாமத்துக்கு யாரும் பாஷ்யம் எழுதவில்லை. விசிஷ்டாத்வைதியான ஸ்ரீ ராமாநுஜாசார்யாளும் இந்த பாஷ்யமேதான் சிஷ்யர்களுக்குப் போதுமென்கிற அபிப்பிராயத்தால் உபநிஷத்துக்களுக்குப்போல இதற்கும் எழுதவில்லை. ஸ்ரீ பகவத்பாதாள் இதற்கு பாஷ்யமெழுதினதே ஸர்வ ஜனோபகாரத்தை முன்னிட்டுத்தான்.

தவிர, ப்ரும்மாண்ட புராணத்தில் அபம்ருத்யுபரிஹாரமாக எழுதின ப்ராயச்சித்தத்தில்

अपमृत्युप्रशान्त्यर्थं प्रतिरूपं द्विजोत्तमे ।
प्रदद्यान्महिषीं कृष्णां सवत्सां पूजयेत्ततः ॥
सहस्रनामस्तोत्रं वा सर्वं वारत्रयं जपेत् ।
मृत्युरोगप्रशान्त्यर्थं आत्मनश्च शुभाप्तये ।

अच्युतानन्त गोविन्द नामोच्चारण भेषजात् ।
नश्यन्ति सकला रोगाः सत्यं सत्यं वदाम्यहम् ॥

என்று மஹாபாரத ச்லோகங்களை எடுத்துக் காண்பித்திருப்பதால் இதன் கௌரவம் தெரியவருகிறது. கிற்க,

अच्युतानन्त गोविन्देत्येतन्नामत्रयं द्विजः ।
अयुतवयसंख्याकं जपं कुर्याद्धि शान्तये ॥

என்கிற சங்கரகீதா வசனங்களாலும் இதன் பெருமை தெரிய வருகிறது.

இப்பேர்ப்பட்ட புஸ்தகத்தைப் பாஷ்யத்தின் தமிழுரையுடன் எல்லாருக்கும் பாராயணத்திற்கு உதவும்படி உயர்ந்த கடிதத்திலும் த்யானத்துக்கு ரஞ்சிதமான ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் படத்துடனும் அச்சிட்டு வெளியிட்டுக் கொடுத்து வருவது எல்லோருக்கும் ஸந்தோஷத்தை மூட்டுமென்பதில் ஸந்தேகமில்லை.

....இப்படி ஸர்வ ஜனோபகாரமான கார்யம் செய்யும் இந்த ப்ரசுரதாருக்கு ஸர்வ மங்களமும் உண்டாகும்படி ஸ்ரீ மஹா விஷ்ணுவை ப்ரார்த்திக்கிறேன்.

சுபமஸ்து.

வெகுதூரப் பிரயாணங்களுக்கும் ஏராளமான கூட்ஸ்—சாமான்கள்—அனுப்புவதற்கும் ரயிலுக்கு சமானம் ஒன்றும் கிடையாது. நூறுமைல்களுக்கு உட்பட்ட இடங்களுக்கு மோட்டார் பிரயாணம் வசதிதான். ஆனாலது வெகுதூரப் பிரயாணத்துக்கோ, மூட்டை முதலியன அனுப்புவதற்கோ லாயக்கில்லை. இந்தியாவில் மோட்டாருக்கும் ரயிலுக்கும் ஏற்பட்டிருக்கும் போட்டியை நியாய வழியிலோ, நாட்டுக்கு உதவியான வழியிலோ இன்னும் தீர்க்கப்படவில்லை. ரயிலுக்குப் போட்டியாக மோட்டாரைக் கருதி ரயில்பாதை போகும் வழியே கப்பிரோடும் போடக்கூடாது. ரயிலுக்கு உதவியாகக் குக்கிராமங்களை இணைத்துக் கிராம ரோடுகளைக் கப்பியிட்டு மோட்டார் வசதி யளித்து அவைகளை ரயில்வேஸ்டேஷனோடு இணைக்கவேண்டும். ரயில் மூலம், ரோடு மூலம், கேனல் மூலம் செல்லும் போக்குவரத்துக்களை மித்திரபேதம் பண்ணாமல் ஒன்றுசேர்த்துவைக்க ஒரு ஸ்தாபனம் சர்க்காரில் சீக்கிரம் ஏற்படுத்த வேண்டும்.

டாக்டர் பி. எஸ். லோகநாதன்.

WANTED.

One Secondary grade and One Higher grade trained teacher.
Apply to:

K. S. Venkataramani,
Kaveripoompatnam,
(Tanjore Dt.,)

WANTED.

One B. A., (Honours) Economics, to work on a rural survey. Knowledge of short-hand and typing will be helpful.

Apply to, stating terms:

K. S. Venkataramani,
Kaveripoompatnam,
(Tanjore Dt.,)

பெங்கால் இலக்கியம்.

(The P. E. N. Books. Bengali Litrature By Annandasankar and Leela Ray. The International Book House Ltd., Bombay Price Rs. 2/)

பி. இ. என் புஸ்தகக் கொத்துக்களில் இரண்டாவது இலக்கியப் பிரசுரம் வரப் பெற்றோம். இலக்கியத் துறையில் ஓர் அரியசேவை. "அகண்ட ஹிந்துஸ்தான்" என்றசொல் அன்வர்த்தமாக உதவும் ஒரு சேவை. இலக்கியங்கள் எப்படி இந்திய நாட்டில் ஒன்றுக்கொன்று ஒற்றுமையை வளர்க்க உதவுகின்றது என்பதையறிய பலவேறு பாஷைகளின் இலக்கியங்களைப் படித்து ஒப்பிட வேண்டும். இவ்விதம் சுலபத்தில் ஊடுருவிப்பார்க்கஉதவும் நோக்கத்துடன் இந்த இலக்கத்தார் பிரசுரித்திருக்கும் புஸ்தகங்களில் இது ஒன்று. சுலபத்தில் சுருக்கமாக வங்க நாட்டில் இலக்கிய வளர்ச்சியையும் நாளது வரையில் எவ்வளவு தூரம் முன்னேறி இருக்கிறதென்பதையும் காட்டுகிறது. வகுப்புத்துவேஷம் எவ்வாறு வங்க நாட்டின் இலக்கிய கர்த்தாக்களுக்கு இல்லாதது என்பது நன்றாகப் புலப்படும். மைக்கேல் மதுசூதன்கத்தரின் 'வ்ரஜாங்கனா' ராதையும் க்ருஷ்ணனும் நடித்த லீலைகளைத் தழுவியது. "மேகனாதவதம்" ஸ்ரீமத் ராமாயணத்திலிருந்து இயற்றியது. தௌலத்காஜி, அலாலல் முதலிய முஸ்லீம் கவிகள் ஹிந்து புராணங்கள், சரித்திரங்கள், இவைகளைத் தழுவிக் கவிதைகள் எழுதியுள்ளார்கள் என்றவை போன்ற பல விஷயங்கள் வங்க நாட்டிற்கு வெளியேயுள்ள நமக்குப் புலப்பட உதவும் அரிய புத்தகம். மேன்மேலும் இவ்வித சேவை வ்ருத்தியடைய ப்ரார்த்திக்கிறோம்.

'ராதா'

யாருடைய சுதந்திரம் ?

(WHOSE FREEDOM ?)
International Book House Ltd., Price 0—8—0 Bombay, India.

இத்தலைப்புடன் கூடிய சிறு புஸ்தகம் "இண்டர் நேஷனல் புக் ஹௌஸ்" பிரசுரம் வரப்பெற்றோம். இப்பொழுது நடைபெற்றுவரும் யுத்தத்தின் அரிய படிப்பினைகளை யாராய்ந்து தத்துவங்களை விளக்கும் பல அரிய வியாசங்கள் கொண்டது. இவ்வுலக சமாதானத்திற்கு இன்றியமையாத சாதனங்கள் யாவையென்று கேட்டால் இப்புத்தகம் பதிலளிக்கும். பல ஆசிரியர்கள் எழுதியவைகளைப் பிரசுரகர்த்தாக்கள் தொகுத்திருக்கும் அழகு ஒருவரே ஒரே விஷயத்தைப் பற்றிச் சாங்கோபாங்கமாக எழுதியது போல்த் தோன்றும். முக்கியமாக இரண்டு அமெரிக்கர்கள் எழுதிய "யாருடைய சுதந்திரத்திற்கு" "வெள்ளையர்களுக்கு மட்டும்" என்ற வியாசங்கள் ஆழ்ந்த உண்மைகள் பதிந்தவை. ப்ரதியொருவரும் உலக சமாதானத்தை விரும்பினால் கவனித்து நடைமுறையில் அனுஷ்டிக்க வேண்டிய விஷயாலோசனைகள். பாரதநாட்டுத் தேசாபிமானிகள் படித்துப் போதிக்க வேண்டிய தத்துவங்கள் பலகொண்டவை. படித்து சிந்தனையிலாழுங்கள்.

'ராதா'

IDEAL SUMMER RESORTS ON THE PLAINS.

Tranquebar, Tirukkadayur, Tiruvengadu, (Svetaranyam), and Kaveripoompatnam.
Visit them once and enjoy the light, cool, sea-breeze.

Edited & Published by K. S. Venkataramani at No 43 Mahadana Street Mayavaram, printed by V. Ramamurthi B. A., at the Mirasdar's Welfare Press, 29, Mahadana Street, Mayavaram.